எதிர்வரும் வாரத்திலிருந்து மலைமுரசு சனிக்கிழமை களில் வெளியாகும்

மார்கழி மாதம் 22ம் திகதி

January 06, 2013

மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 24

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## திருமலையின் இளங்குருத்து திரும்பி வரும் வாய்ப்பு !!!



# மரண தண்டனையில் இருந்து தப்புவாரா ரிசானா ??

(பக்கம் 7ல்)

# பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தக்கவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்



## கிழக்கின் எதிர்க்கட்சித் தலைவர்

புதிதாகப் பின்பற்றப்படவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தேர்தல் முறைமை ஊடாக தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைத் தற்போதுள்ள அளவில் தக்கவைப்பது மட்டுமல்ல அதன் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வேண்டும் என கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

புதிதாக அறிமுகமாகியுள்ள வட்டாரத் தேர்தல் முறைமை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுகுமுறை (பக்கம் 7ல்)

# உயருமா மின் கட்டணம் ???

மின்சாரசபை பலவருடங்களாக மானிய விலைக்கு பெற்று வந்த பெற்றோலியத்தின் விலை அதிகரிக்கப் பட்டிருப்பதால் விரைவில் மின் கட்டணங்களுக்களும் அதிகரிக்கப்படும் சாத்தியங்கள் அதிகளவில் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு வழங்கும் எரிபொருளைச் சந்தை விலைக்கே வழங்க முடிவு செய்துள்ளது. இம்முடிவால் இவ்வளவு காலமும் பெற்று வந்த மானிய விலை எரிபொருளை இனிவரும் காலங்களில் மின்சார சபையால் பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது.

எரிபொருளின் விலை அதிகரிப்பால் மின்சார அலகுகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

எதிர்வரும் காலங்களில் எரிவாயுக் கட்டணங்களும் அதிகரிக் கப்படும் சாத்தியங்கள் உள்ளன என்றே தெரியவருகின்றது.

ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மசகெண்ணைக்கான கொடுப்பனவுகளை செய்ய முடியாதுள்ள நிலையினாலேயே இச்சங்கடம் இலங்கைக் குத் தோன்றியுள்ளது.

## மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழு - கிழக்கு மாகாண சபை தீர்மானம்

மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துவதென கிழக்கு மாகாண சபை தீர்மானம் மேற்கொண்டுள்ளது. (பக்கம் 7ல்)

## புத்தாண்டில் புத்துணர்ச்சி பெறவுள்ள திருமலை ஊடக இல்லம்

திருகோணமலை ஊடக இல்லத்தை தொடர்ந்து மீண்டும் இயங்கவைப்பதற்கு சேர்ச் போ கொமன் கிரவுண்ட் நிறுவனம் ஐரோப்பிய வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து உதவுவதற்கு முன்வந்துள்ளது. (பக்கம் 7ல்)

## உல்லாசப் பயணிகளுக்காய் வரவேற்புத் தூண்கள்

உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியான திருக்கோணமலையில் அவர்களை மேலும் களிப்புக்குள்ளாக்குமாறு பொருத்தமான இடங்களில் பொருத்தமான வாசகங்களுடன் வரவேற்புத் தூண்களை நிறுவ மாகாண சபை முடிவு. (பக்கம் 7ல்)

## வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணமாக ரூபா 20,000.00

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நீர்த் தேக்கங்களிலிருந்து பெருகிய நீரினால் வீடுகளில் சிறு சேதங்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்காக கிழக்கு மாகாண சபை ரூபா 20,000த்தை நிவாரணமாக வழங்கவுள்ளது. (பக்கம் 7ல்)

## மாகாணசபை உறுப்பினர்களுக்கு வருகைக் கொடுப்பனவு

மாகாண சபையின் கூட்டங்களுக்கு வருகைதரும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும் அவர்கள் அவ்வாறு கூட்டங்களுக்குச் (பக்கம் 7ல்)

## சுதேச வைத்தியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

கிழக்கில் நிலவும் சுதேச வைத்தியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது கிழக்கு மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் மொத்தமாக 22 வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான வைத்தியர்களை நியமனஞ் செய்யும் அனுமதியைக் கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

**கல்வியிலிருந்து அறிவை நோக்கி** அண்மையில் திருமலையின் அரங்காடல் நிகழ்வில் சிறுகதைகள் தொடர்பாகப் பேசக் கிடைத்தது. அப்பேச்சின் போது கல்வியினையும் அறிவையும் வேறுபடுத்த வேண்டிய தேவையொன்று எழுந்தது.

கல்வியின் ஊடாக நாம் அறிவைப் பெறலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. ஆனாலும் கல்வி என்பது பாடசாலைக் கல்வி மட்டுமல்ல என்பதை எல்லோரும் தெரிந்திருக்கின்றோமா? பாடசாலைக் கல்வியுடன் நாம் பெற்றுக்கொள்ளும் மேலதிக கல்விதான் எமது அறிவை ஆயுதமாக மாற்றும் வல்லமை கொண்டுள்ளது என்பதைத் தான் நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். இங்கு ஆயுதம் என்னும் வார்த்தை ஓர் அடைமொழியே! அதாவது நாம் விரும்பும் விடயத்தைப் பெற்றுக் கொள்ளப் பயன்படும் அறிவையே நாம் ஆயுதம் என்னும் அடைமொழியால் அழைக்கின்றோம்.

உலகம் வியந்த கவி பாரதியார் கூடப் பல இடங்களில் ஆயுதம் செய்வோம் என்ற அடை மொழியால் குறித்திருப்பது அறிவை ஆயுதமாக்கும் செயற்பாட்டையே.

எனில் அறிவை ஆயுதமாக்கு வதற்குத் தேவையான அறிவை நாம் பாடசாலைக் கல்வியிலிருந்து பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை. அதனைப் பெற்றுக்கொள்ளத்தான் கிராமங்கள் தோறும் நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைதான் அறிவை ஆயுதமாக்கும் வகையில் கூர்மை செய்யக் கூடியவை.

அறிவைச் செம்மைசெய்யும் ஆற்றலைத் தரும் நூலகங்களில் வாசிப்பதற்குக் கிடைக்கும் கதைகள், சிறுகதைகள், கவிதைகள் வரலாறுகள் போன்ற இன்னோரன்ன வகைப் புத்தகங்களே மனித அறிவைக் கூர்மைசெய்யும் அற்புத சாணைக் கற்கள்.

ஆனால் எம்மில் எத்தனைபேர் புத்தகங்களை வாசிக்க ஆவலுள்ள வர்களாய் இருக்கின்றோம். சரி இந்தப் புத்தக வாசிப்பு எவ்வாறு வாழ்விற்கு உதவும் ? எனக் கேட்கலாம் நீங்கள். உதாரணமாக வீரசிவாஜி என்ற தமிழ் மன்னன் எவ்வாறு உலகம் போற்றும் வீரனானான் என்ற கேள்வியின் விடை என்ன? அவனது தாய் தனது மகன் சிறுவயதிலிருந்த போதே வீரக்கதைகளை வாசித்து ஊட்டிய அறிவுக் கூர்மைதான் அவனை உலகப் புத்தகத்தின் பக்கங்களில் அழியாமல் பதித்துள்ளது.

இந்த ஒரு உண்மை உதாரணம் போதுமே வாசிப்பின் மேன்மையை அறிவதற்கு! அடுத்து வைத்தியர்களாக கற்றவர்கள் எத்தனை பேர் பெரிய வைத்தியசாலைகளைக் கட்டி அவற்றைப் பராமரித்து வசதி படைத்த மனிதர்களாக வாழ்கின்றார்கள்? திருக்கோணமலையை எடுத்துப் பாருங்கள். பிரபல்யமான இரண்டு [redacted]

## ஆசிரியர், அதிபர் சேவையிலுள்ளவர்களுக்கு ஏற்புடைய நன்மைகள் புத்தாண்டிலாவது கிடைக்க வேண்டும் – தேசியத் தலைவர் எம். அனஸ்

**அதிபர்,** ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சேவைப் பிரமாணக் குறிப்பு, பதவி உயர்வு மற்றும் சம்பளம் என்பன புத்தாண்டிலாவது கிடைப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் எம்.அனஸ் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அதிபர், ஆசிரியர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பு, பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வுகள் இன்றி பல வருடங்களாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். 2013 ஆம் ஆண்டு அதிபர், ஆசிரியர்கள் ஏற்கும் வகையில் இவை அனைத்தும் கிடைத்து அவர்களது வாழ்வு சிறக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் வகை செய்ய வேண்டும்.

2008.09.08ஆம் திகதி உயர் நீதிமன்றத் தீர்ப்பின்போது இணங்கிக்கொண்டதற்கமைய 2008.07.01ஆம் திகதி முதல் அமுலாக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளுக்கான புதிய சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் இதுவரை அமுலாக்கப்படவில்லை. பதிலாக 28.. 2010ஆம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் அதன் அமுலாக்கத் திகதியை 2011.01.01 இற்கு பிற்போட்ட அரசு, 2012 ஒக்டோபர் 06ஆம் திகதி உலக ஆசிரியர் தினத்திலாவது அதனை வெளியிட முன்வரவில்லை.

இருந்தபோதும் உயர் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டாவது நாளில் உயர் கல்வி மற்றும் தொழில்த் தகைமையை அடிப்படையாகக் கொண்டு, துரித பதவி உயர்வு என்ற தலைப்பில் 2008.09.10இல் ஊடக விளம்பரம் ஒன்றை வெளியிட்டு அதிபர், ஆசிரியர்களின் மிதமிஞ்சிய அபிமானத்தைப் பெற்றுக்கொண்ட அரசாங்கம் அதனை 6/2006 (VIII) ஆம் இலக்கச் சுற்றறிக்கையாக 2010.01.05இல் வெளியிட்டிருந்தது.

சேவைப் பிரமாணக்குறிப்பு வெளியிடப்படாமையினால் இதுவரை அச்சுற்றறிக்கை அமுல் செய்யப்படாமல் கிடப்பில் கிடக்கின்றது. இந்தச் சேவைப் பிரமாணக்குறிப்பு தொடர்பில் 2011.09.22இல் தொழிற்சங்கங்களின் அபிப்பிராயமும் பெறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிவந்த 2/97 சுற்றறிக்கை மூலம் தோற்றுவிக்கப்பட்ட சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணக் கோரி, நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய, ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு - குறுகிய காலம் மற்றும் நீண்டகால பிரதிலாபங்கள் என்ற ஆரவாரத்துடன் வெளிவந்த 6/2006 (VIII) ஆம் இலக்கச் சுற்றறிக்கையும் இன்னும் கிடப்பிலேயே உள்ளது.

எனவே, இது சம்பந்தமாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வாழ்வு சிறப்பதற்கு வழிசமைக்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பூவரசந்தீவு மக்களுக்கு நிவாரணம்

வெள்ளப்பாதிப்பால் அல்லலுறும் பூவரசந்தீவு மக்களுக்கு நிவாரணப் பொதிகளை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூவ் வழங்கியுள்ளார்.

அப் பொதிகளில் அரிசி, பருப்பு, கிழங்கு, பால்மா மற்றும் சீனி ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிவாரணத்தை சுமார் 450 குடும்பங்கள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.





## பாலம்போட்டாறு அம்மன் கோவில் வெள்ளத்தில்

திருக்கோணமலையின் பிரசித்தி பெற்ற தலங்களுள் ஒன்றான பாலம்போட்டாறு அம்மன் கோவில் கடந்த வெள்ளத்தில் மூழ்கியது.

பெருந்தெரு வேலைகள் நடைபெறுவதால் நீர் வடிந்தோடும் கால்வாய்கள் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டுள்ளன. அதனால் பெரும்பாலான புதிய இடங்கள் ஊடாக வெள்ள நீர் பெருக்கெடுத்துப் பாய்ந்ததை கொழும்பு- திருகோணமலைப் பிரதான வீதியில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கடும் மழை காரணமாக சுமார் ஆறு அடி உயரம்வரை நீர் பாய்ந்து சென்று கோவிலுக்கு அருகிலுள்ள ஆற்றுக் கால்வாயில் வீழ்ந்துள்ளது.

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பகுதிகள் மழை வெள்ளத்தால் கடந்த சில நாட்களாகச் சூழப்பட்டுள்ளதுடன் திருக்கோணமலை வவுனியா பெருந்தெரு கடுமையான சேதங்களுக்குமுள்ளாகியுள்ளது.

## ஜப்பானிய தேசிய தினத்தில் தமிழ்த் தலைவர்கள்

ஜப்பானின் தேசிய தினக் கொண்டாட்டங்கள் அண்மையில் அதன் இலங்கைத் தூதுவராலயத்தில் கொண்டாடப்பட்டபோது தமிழ்த் தலைவர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.





## ஞானம் சஞ்சிகையின் 150வது இதழ்

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் 150வது சிறப்பிதழ் கடந்த 28.12.2012 அன்று திருக்கோணமலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஈழத்துப் போர்க்காலச் சிறப்பிதழாக வெளிவந்திருக்கும் இவ்விதழின் அறிமுகவிழாவில் திருமலை நகரப்பகுதி எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

திரு. வீ.என் சந்திரகாந்தி அவர்களின் ஏற்பாட்டில் திருமலை நவத்தின் தலைமையில் நிகழ்ந்தது அறிமுக விழா.

இப் போர்க்காலச் சிறப்பிதழ் ஈழத்தின் உரிமைப் போரின்போது தோன்றிய படைப்புக்களை தொகுத்து ஆக்கப்பட்டதொன்று. வருங்காலத்தினர் ஈழப் போர் தொடர்பான தெளிவான அறிவைப் பெற உதவும் இதழாக அமைந்துள்ளது என ஞானம் இதழாசிரியர் திரு ஞானம்சேகரன் அவர்கள் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லப்பட்ட இளைஞர்களின் நினைவேந்தல் நிகழ்வு

திருக்கோணமலைக் கடற்கரையில் வைத்து கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் நினைவுநாளை தி.இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 2004ம் ஆண்டின் உயர்தர மாணவர்களின் பிரிவு நினைவு கூர்ந்தது. அவ்வாறு கொல்லப் பட்டவர்களின் 07வது ஆண்டை 02.01.2013ல் நினைவுகூர்ந்த அவர்கள் எழுதுகருவிகளையும் புத்தகங்களையும் மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

திருக்கோணமலை பாலம் போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 40 மாணவர்கள் புத்தகங்களையும் காலணிகளையும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் சண்முகா ஆண்கள் இல்லத்திலுள்ள மாணவர்களுக்கு புத்தகங்களும் அன்றைய நாளில் இரவு நேர உணவும் வழங்கப்பட்டது.



## சர்வோதயத்தின் ஆண்டுவிழாவும் சேவை நிறைவு விழாவும்

திருகோணமலை மாவட்ட சர்வோதய நிலையத்தின் ஏற்பாட்டில் புதுவருட வரவேற்பு நிகழ்வும் இணைப்பாளரின் 34 வருட சேவை நிறைவு விழாவும் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சர்வோதயத்தின் மாகாண இணைப்பாளர் வேல்முருகு ஜீவராஜ் 34 வருட சேவை நிறைவை கொண்டாடுகின்றார்.

அலஸ்தோட்டம் மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது ஊடகவியலாளர்கள் சர்வமத பிரதிநிதிகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# வரலாற்று உருவாக்கக் கால திருக்கோணமலை.

சென்ற வார தொடர்ச்சி....

அப்பலகையில் அக் கல்வெட்டு ஏழாம் - எட்டாம் நூற்றாண்டிற்கு உரியது எனவும் எழுத்து பல்லவர்களுடையது எனவும் மொழி சமஸ்கிருதம் எனவும் காணப்பட்டது.

அப் பலகையில் உள்ள காலப்பகுதி ஏழாம்-எட்டாம் நூற்றாண்டிற்கு உரியதுதான். ஆனால் பல்லவர்களுடைய எழுத்து சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு இருக்கிறது என்பதுதான் அப் பலகையின் விளக்கத்தின் உண்மைத் தன்மைக்கு சவாலாக இருக்கிறது.

இக்கல்வெட்டுக்கள் ஆறாம் நூற்றாண்டிக்கு முன்னவையாக இருந்தால் அவை நிச்சயம் சமஸ்கிருதமாகத்தான் இருக்கும் ஏன் என்றால் ஆறாம் நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் பல்லவர்கள் தமிழை கூட சமஸ்கிருதத்தில்தான் எழுதினர்.அவ்வாறு எழுதியதை சில ஆய்வாளர்கள் பல்லவர்களுக்கு சமஸ்கிருத்த்தில் இருந்த மோகம் காரணமாகவே எழுதப்பட்டதாக குறிப்பிடுகின்றனர்.

ஆனால் பல்லவர்கள் ஆறாம் நூற்றாண்டில் தமிழில் தங்களது கல்வெட்டுக்களை எழுதத் தொடங்கி விட்டனர். அப்படியானால் இது எப்படி சமஸ்கிருதமாக இருக்கும்?.

இச் சந்தேகத்தை என் அறிவுக்கு எட்டியவரை தீர்க்க முயன்ற போது பின் வரும் பதில் எனக்கு கிடைத்தது.

இவ்வெழுத்துக்கள் சமஸ்கிருதம் அல்ல. அவை தமிழ் பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டவை ஆனால் அதன் அர்த்தங்கள் சமஸ்கிருதம், தமிழ் பிராகிருதம் ஆகியன வற்றின் செல்வாக்கோடு காணப்படும். அதாவது இது வியாபார மொழி. பல்லவ 'வியாபாரிகளின் பதிவுகள் இந்த கொச்சை மொழியில்தான் அக்காலத்தில் பதியப்பட்டுவந்தது.

ஆனால் இதை வாசித்த கல்வெட்டு வாசிப்பாளர்கள் தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டில் சமஸ்கிருத செல்வாக்கு காணப்படுவதால் மொழி சமஸ்கிருதம் என முடிவெடுத்து விட்டார்கள். ஆனாலும் எழுத்துரு தமிழ் பிராகிருதம் என தெரிந்தும் பல்லவ நூல் எழுத்து என்று .போடப்பட்டது தான் எனக்கு புரிந்தும் புரியவில்லை (இது அரசியல் கட்டுரை இல்லையே).

மேலும் இது தொடர்பான விபரங்களை நான் தேட முயன்ற போது சில வரலாற்று ஆராச்சியாளர்கள் பின் வருமாறு அந்த மொழியை பற்றி விளக்கமளித்தனர். இது பல்லவ வியாபாரிகளின் சர்வதேச மொழி, தமிழில் எழுதப்படும் தமிழ் சமஸ்கிருதம், பிராகிருதம் கலந்து பேச்சின் தன்மையை தரும் மொழியாம்.

இந்திய வரலாற்று ஆய்வாளர்கள் இதைனை கிரந்தம் என்று சொல்கின்றனர். இன்னும் இலகுவாக சொல்ல முயன்றால் இவ் வியாபாரச் சார்பு கல்வெட்டுக்கள் எவ்வாறானவை எனில் நாம் தமிழை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பும் குறும் செய்தி முறை போன்றது.

அக்காலத்தில் தமிழ் பிராமி என்பது வியாபாரிகள் எல்லோராலும் வாசிக்க கூடிய எழுத்துருவாக காணப்பட்டு இருக்கிறது அதன் காரணமாகவே இலங்கையில் உள்ள பல்லவ சார்பு கல்வெட்டுக்கள் தமிழ் சமஸ்கிருதம் பிராகிருதம் கலந்து பொருள் தருபவையாக தமிழ் எழுத்துருவில் எழுதப்பட்டு இருக்கிறது.

எனவே இக் கல்வெட்டு தொடர்பான முடிவு இவ்வாறுதான் இருக்கும்.

எழுத்துரு-தமிழ் பிராமி

மொழி –தமிழ் சமஸ்கிருதம் பிராகிருதம் (பல்வர்களது வியாபார பதிவு மொழி)

நாம் அக் கல்வெட்டுகளின் விளக்கத்தை ஆராய முன் பல்வர்களை பற்றி சுருக்கமாக தெரிந்து விட்டு சென்றால் புரிதல் கொஞ்சம் அதிகமாக இருக்கும் என நினைக்கிறேன்.

### வாருங்கள் பல்லவர்கள் பக்கம் சென்று வருவோம்..

பல்லவர் என்போர் தென்னிந்தியாவில் களப்பிரர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 250 முதல் கி.பி.850 வரை சுமார் அறுநூற்று ஐம்பது ஆண்டுகள் தமிழகத்தில் நிலைத்து ஆட்சி புரிந்தவர்கள்.. தாம் போகும் இடங்களில் தங்கள் இருப்பை பதிவு செய்த இவர்கள் கடைசி வரைக்கும் தங்கள் உருவாக்கத்தை குறிக்கவில்லை.

அவர்களைப் பற்றிக் கிடைத்துள்ள சான்று மூலங்களைக் கொண்டு, பட்ட முறைமையை முற்றும் முறைப்படுத்தவும் முடியவில்லை. - வின்சென்ட் ஸ்மித் - என்னும் ஆங்கில வரலாற்றாசிரியர் தமது நூலின் முடிவாகப் பல்லவர் தென்னிந்தியரே என்று வரையறுத்துள்ளார். சாதவாகனப் பேரரசில் குறுநில மன்னர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் செயல்பட்டு வந்த இவர்கள் சாதவாகனப் பேரரசு வலுக்குன்றியதும் கிருஸ்ணா ஆற்றிற்குத் தெற்குப்பகுதியை ஆளத் தொடங்கினர். போதிய வலிமை பெற்றதும் தமிழ் நாட்டில் உள்ள தொண்டை நாட்டையும், களப்பிரர்களையும், சிற்றரசர்களாக இருந்த சோழர்களையும் வென்று புதுக்கோட்டை வரை சென்று தமிழகத்தை ஆளத் தொடங்கினர்.

எது எவ்வறாயினும் ஆராய்ச்சியாளரான இராசநாயகம் அவர்கள் இலங்கையை அடுத்துள்ள மணிபல்லவம் (காரைத்தீவு) பல்லவர் பிறப்பிடம் என மணிமேகலை காப்பியம் மூலம் நிரூபிக்கிறார்..

அவர் கூறுவதாவது - மணிமேகலையில் கூறப்பட்டுள்ள சோழனை மணந்த பீலிவளை என்பவர் நாகர் மகள் ஆவாள்.

அவள் பெற்ற மைந்தனே திரையால் கடத்தப்பட்டுக் கரை சேர்ந்த முதல் பல்லவன். அவன் தொண்டைக் கொடியால் உந்தப்பட்டு வந்தமையின் -திரையன்- என்றும் வழங்கப்பெற்றான். அவன் மரபினரே தம் தாயகம் தாங்கிப் (மணிபல்லவம்) பல்லவர் எனப்பட்டனர். பல்லவர்களின் முதல் அரசன் பெரும்பாணாற்றுப் படையில் புகழ்பெற்ற தொண்டைமான் இளந்திரையன் ஆவான் என கூறுகிறார்.

மேலும் ·யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களால் மணிபுரம் எனப்படுகிறது. அங்கு நாகரும் இருந்தமையால் மணி நாகபுரம் என்னும் பெயர் பெற்றது. இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வருபவர்க்கு யாழ்ப்பாணம் ஒரு போது (போத்து- sprout) போலக் காணப்படுதலின், அது போது (போத்து) எனப்பட்டது.

போது, போத்து, பல்லவம் என்பன ஒரே பொருளைக் குறிப்பன. யாழ்ப்பாணத்திலிருந்து போந்தவர் ஆதலின், தம்மைப் -போத்தர்- என்றும், -பல்லவர்- என்றும் பல்லவ அரசர் கூறிக்கொண்டனர். மணிபல்லவம் என்னும் தீவு மணிமேகலையில் குறிக்கப்பட்டிருத்தலால் மணிமேகலை காலத்து மக்கட்கு விளங்கி இருத்தல் புலனாகும். -வீரகூர்ச்சன் நாகர் மகளை மணந்து அரசு பெற்றான்- என்று பல்லவர் பட்டயம் கூறுதலும், கரிகாலன் நாகர் மகளை மணந்து பெற்ற இளந்திரையன், தொண்டை மண்டலம் ஆண்டான் என்பதும் ஆராய்ச்சிக்கு உரியனவாகும்.

மேலும், பல்லவர், இன்ன இடத்திலிருந்து வந்ததாக ஒரு பட்டயத்திலும் கூறப்படவில்லை. -தொண்டைமண்டலத்துப் பழங் குடியினரான பள்ளி மரபினரே பிற்காலப் பல்லவர்- என்றும் முடிவு செய்தனர். (நன்றி விக்கிபீடியா)

காப்பியம் உண்மை சொல்கிறதோ இல்லையோ பல்லவர்கள் பெரும் அரசை உருவாக்கிய பின்னர் இலங்கையில் தங்களது இருப்பை நிலை நாட்டியே வந்திருக்கின்றனர்.

இன்னும் நடுவோம்

**கா. செந்தூரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்காடலின் 07வது வெளி நிறைவுற்றது

திருக்கோணமலையில் திறந்த அரங்கொன்றை உருவாக்கி கடந்த ஒரு வருடமாகச் சிறப்பாக நடந்துவருட் - அரங்காடல்- கலை கலாசார நிகழ்வின் 07வது அரங்கச் செயற்பாடு கடந்த 30.12.2012அன்று மாலை 4 மணியிலிருந்து 6.30 வரை நடந்தேறியது.

திருக்கோணமலை இராம கிருஸ்ண மிசன் கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் அரங்கில் நிகழ்ந்த இவ் ஏழாவது வெளியில் பல புதிய விடயங்களை நுகரக்கூடியதாக இருந்தமை அரங்காடலின் தனித்துவம் என்றே சொல்லக் கூடியதாக இருக்கின்றது.

2011ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 18ம் திகதி திருக்கோண மலையில் ஆரம்பமான அரங்காடல் இரு மாதத்திற்கு ஒரு முறை வரும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையின் மாலையில் இந்துக் கல்லூரியின் அரங்கில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆற்றலுடைய எவரும் ஆற்றுகைகளை வெளிப்படுத்தலாம் என்ற வரையறையற்ற அரங்காக அரங்காடல் இருக்கின்றமை விசேட அம்சமாகும். அந்த அடிப்படையில் அரங்காடலின் அரங்குகள் ஒவ்வொன்றும் புதிய விடயங்களை மக்களுக்கு வெளிக்காட்டும், பார்வையாளர்களுக்கு விருந்தளிக்கும் விதமாக இருக்கின்றது.

தூரப்பிரதேசங்களில் இருந்தும் வேறு மாவட்டங்களில் இருந்தும் கலைஞர்களின் சிறந்த படைப்புக்களை அரங்காடல் மேடையேற்றியுள்ளது. அவ்வகையில் மூதூர் பிரதேசதத்தின் சேனையூர் மத்திய கல்லூரியின் வீர அபிமன்யு நாட்டுக் கூத்தினை நகரப் பார்வையாளர்களுக்கு என அரங்காடல் மேடையேற்றியிருந்தது. அதேபோல வவுனியாவில் கலாலயா கலை அமைப்பின் நாடகமொன்றினை மேடையேற்றியிருந்தமை சிறப்பம்சமாகும்.

திருமதி சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகளின் நடனங்களைத் தவறாது தனது அனைத்து அரங்குகளிலும் பதிவு செய்துள்ள அரங்காடல் ஆசிரியர் திருமாறன் அவர்களின் வயலின் இசையினையும் இடைக்கிடை இசைத்திருக்கின்றது. அவ்வாறிசைக்கும் போதெல்லாம் தபேலா, மிருதங்க, கெஞ்சிரா கலைஞர்களின் கூட்டுமுயற்சியாக அவ் இசை நிகழ்வு நடந்தேறியுள்ளன. பல குறும் படங்களை திரையிட்டுள்ள அரங்காடலில் துறைசார் வல்லுனர்கள் தமது கருத்துக்களைப் பரவவிட்டும் உள்ளனர்.

அரங்காடலின் 7வது திறந்த அரங்கானது உலக எண்ணிம நூலகமான - நூலகம்.ஓஆர்ஜி யின் அறிமுகத்தை திருமலைக்கு தந்தமை முக்கிய அம்சமாகும். அவ்வறிமுகத்தை அரங்காடலை தனித்து நின்று இயக்கிவரும் மாயன் அவர்கள் வழங்கியிருந்தார்கள். அவ் அறிமுக உரையின் போது மாயன் குறிப்பிட்டது என்னவென்றால் யாழ் நூலகம் எரிந்த போது அழிந்துபோன 90,000ம் மேற்பட்ட புத்தகங்கள், மற்றும் அறிவுக் களஞ்சியங்கள் எமது கையைவிட்டுப் போய்விட்டன. அவ்வகை அழிவொன்றால் மீண்டும் தமிழ்ச் சமூகத்தை விட்டு அவர்களின் புத்தகங்கள் இல்லாது போய்விடாம்ல் தலைமுறை தலைமுறையாக ஆவணங்களை, தமிழரின் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை சேமித்து வைத்து அடுத்த தலைமுறைக்கு வழங்கும் நூலகம் தான் இந்த நூலகம்.ஓஆர்ஜி ஆகும் என விளித்திருந்தார். அதன் பின் வேல் முன் பள்ளிச் சிறார்களின் முக்கலாசார நடனம் அரங்கேறியது. தமிழ்ல் சிங்கள் ஆங்கில நடன வகைகளை உள்ளடக்கியதாக சுமார் 20 நிமிடங்களுக்குச் சிறார்களால் நிகழ்த்தப்பட்ட இந் நடனத்தை கண்டு அனைவரும் இரசித்திருந்ததைப் பார்க்க முடிந்தது. அடுத்து பத்ம பிரசன் கவிதையொன்றினை வாசித்துச் செல்ல பரத கலா வித்தகர் செல்வி மேனகா விமலானந்தராஜாவின் கௌத்துவ நடனம் சிறப்பாக நிகழ்ந்தது.

இவையிரண்டிற்கும் நடுவே லியோ கழகத்தினர் தமது முயற்சியான கலைஞர் கையேடு பற்றி அரங்கிலிருந்தவர்களுக்கு விளக்கம் கொடுத்தனர். திருமலை மாவட்டத்தில் கலைஞர் கையேடு என்பது அனைத்துக் கலைஞர்களையும் கொண்ட தகவலக் களஞ்சியமாக உருவாக்கும் அவர்களது முயற்சியை தலைமையேற்றிருப்பது மாயன் என்பது அவர்களின் பேச்சின் ஊடாகத் தெளிவாகியது. கலைஞர் கையேட்டுக்கான விபரங்களைத் தம்மிடம் தருமாறு லியோ கழக நகரக் கிளையினர் அரங்கிலிருந்தவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து திரு பவித்ரன் அவர்கள் எனது பார்வையில் கவிதைகள் என்னும் தலைப்பில் கவிதைகள் தொடர்பான பதிவுகளை முன்வைத்தார். மிக நீண்டகாலத்திற்கு முன்பிருந்த கவிதைகளிற் தொடங்கி தற்போதுவரை வெளிவந்துள்ள கவிதைகள் தொடர்பாக தனது பதிவை மிக அழகாக அடுக்கிச் சென்றார் பவித்ரன். அடுத்து திருமதி சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகள் பதம் நடனத்தை அரங்கேற்றினர். நான்கு மாணவிகளால் நிகழ்த்தப்பட்ட இந் நடனம் பாடலுடன் மிகச் சரியாக இணைந்து முகபாவங்களுடன் இரண்டறக் கலந்து பார்வையாளரை அப்படியே கட்டுக்குள் வைத்திருந்தது.

இறுதி நிகழ்வாக மாயன் அவர்கள் - நிலைத்திருத்தலில் சிறுகதைகள் வேண்டிநிற்கும் மாற்றம்- என்னும் தலைப்பில் பாகம் ஒன்றிற்கான தனது உரையை ஆற்றினார். மிக அமைதியாகவும் தெளிவாகவும தனது உரையில் கதைக்கும் சிறுகதைக்குமான வித்தியாசத்தை வெளிக்காட்டிய மாயன் தனது அடுத்த அரங்காடலில் பாகம் இரண்டில் மேலும் சிறுகதைகள் பற்றிய தனது ஆய்வுகளை முன்மொழிவதாகச் சொல்லிச் சென்றார். தொடர்ந்து சபையோர் கருத்தாடலில் தனது கருத்தைச் சிறப்பாகப் பதிவுசெய்த ஆசிரியை சந்ரகலா அரங்காடலானது ஒரு முத்தமிழ் விழாவாக நடந்தேறியதாகச் சொன்னார். இவ்விழா மேலும் சிறக்க தனது கருத்துக்களை முன்வைத்துச் சென்றார்.

இறுதியாக நிறைவுரையினை பிரதீபா மிகச் சுருக்கமாக கூறியதுடன் அடுத்த அரங்காடல் மாசி மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று கூறி விழாவை நிறைவு செய்தார்.

(ஆபி)

# — காலனித்துவ திருகோணமலை —

## முடிந்துபோன காலத்தில் வாழ்ந்துபார்க்கும் அனுபவம்

ஓர் இரவு ரயில் பயணத் தனிமையில் தான் இந்த நூலைப் படித்து முடித்தேன்.

மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கை வண்டியின் மங்கலான மஞ்சள் விளக்கொளி, கண்ணைச்சுற்றும் தூக்கத் தலைவலி, பராமரிப்பற்ற ரயில் பாதையின் இடையறாத ஆட்டம் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு முழுமூச்சாக வாசித்து முடிப்பதற்கு இந்நூல் விறுவிறுப்பான சுவைசொட்டும் புனைகதையோ மிக மேலோட்டமான பொழுதுபோக்குப் புத்தகமோ அல்ல. ஒரு தீவிரமான வரலாற்று நூல்.

ஆனால் ஒரே மூச்சில் படித்து முடிப்பதைத்தவிர வேறெந்தத் தெரிவையும் அந்நூல் எனக்கு விட்டுவைக்கவில்லை. அத்தனை விறுவிறுப்பு. அவ்வளவு சுவாரசியம்.

காதலும் மோதலும் நிறைந்த வரலாற்றுப் புனைகதைகளையே மிஞ்சக்கூடிய விறுவிறுப்பும் சுவாரசியமும் ஆரம்ப நிலை வாசகர்களைக்கூட புத்தகத்தைக் கீழே வைக்க விடாது. இத்தனைக்கும் இந்நூல் மேலோட்டமான, எளிய மொழிநடையில் அமைந்ததென்று கூடச் சொல்ல முடியாது.

உள்ளடக்கத்தின் தன்மையே இந்நூலுக்கு அத்தனை சுவையைக் கொடுக்கிறது.

தன்னுடைய ஆய்வு முடிவுகளையோ கருத்துக்களையோ எந்த இடத்திலும் சரவணபவன் இந்நூலில் தரவில்லை. வாசகர்களின் கைகளைப்பிடித்துக்கொண்டுபோய் வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்தையும் தொட்டுத் தடவி உணர வைத்திருக்கிறார்

மு.மயூரன்

இலங்கை தொடர்பான வரலாற்றாய்வுகளில் திருகோண மலையின் வரலா ற்றுப்பாத்திரம் உள்ளடக்கப் பட்டுவந்த போதும் திருகோணமலையின் வரலாற்றினைத் தனித்தும் ஆழமாயும் ஆராயும் ஆய்வுகள் எம்மிடையே அதிகம் இல்லை

இத்தனைக்கும் இலங்கைத் தமிழர் உரிமைப்போராட்டத்தின் பல்வேறு தரப்புகளும் திருகோணமலையின் முக்கியத்துவத்தை உணர்ந்தும் பேசியும் வந்துள்ளன.

சரவணபவன் எழுதி இதற்கு முன்னர் வெளி வந்த வரலாற்றுத் திருகோணமலை எனும் நூலின் தொடர்ச்சியாக காலனித்துவத் திருகோணமலையை நாம் பார்க்கலாம். முன்னையது போர்த்துக்கீசரின் வருகை வரைக்குமான திருகோணமலையின் வரலாற்றினை ஆய்வு செய்ய, பின்னையது போர்த்துக்கீசர் வருகைக்கும் பிரித்தானியரின் படைத்துறை வெளியேற்றத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் வரலாற்றினை ஆய்வுசெய்கிறது.

நானூறு பக்கங்கள் கொண்ட இந்த நூலில் நூலாசிரியரின் கருத்தாகவும் முடிபுகளாகவும் [illegible] மிகச்சொற்பமானவையே. [illegible] காலனியாதிக்கக் காலப்பகுதியில் அவ்வக்காலத்தில் வாழந்தவர்களால் எழுதப்பட்ட ஆவணங்களினதும் குறிப்புக்களினதும் கடிதங்களினதும் தொகுப்பாகவே அமைகிறது. இதுவே இந்தநூலின் சிறப்பு.

இத்தகைய நேரடி வாக்குமூலமாக அமையும் ஆவணங்களைப் படிக்கும்போது அந்தந்தக் காலங்களில் வாழ்ந்து பார்க்கும் அனுபவம் எமக்குக் கிட்டுகிறது. கோணேசர் கல்வெட்டைத் தவிர்த்து ஏனைய ஆவணங்கள்




அனைத்தும் திருகோணமலையுடன் தொடர்புடைய வெளிநாட்டு அதிகாரிகளால் எழுதப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பு. இதனால் காலனித்துவ காலத்து திருகோணமலையை நாம் காலனியாதிக்கவாதிகளின் கண்களாலேயே பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. திருகோணமலை மக்களின் வாழ்வியலையும் சரி, காலனியாதிக்கக்காரர் தமக்கிடையில் போட்டுக்கொண்ட சண்டைகளையும் சரி நாம் அவர்கள் கண்களால் காண்கிறோம்.

இன்றைய எம் மக்களது சமூக [illegible] அரசியல் இயக்கங்களிலும் [illegible]துவக்காலம் பாரியளவில் தாக்கம் செலுத்தியிருக்கிறது. எமது உளவியல் அமைப்பிலும் கூட காலனித்துவக்காலத்தின் தாக்கம் கணிசமான அளவில் செல்வாக்குச் செலுத்துகிறது. அந்த மிக முக்கியமான காலனித்துவக்காலத்தை, ஆதிக்க வாதிகளின் கண்களால் நாம் பார்க்கும்போது எம்மை நாம் வெளியில் இருந்து பார்த்து மதிப்பிட்டுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது. இந்தப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஆவணங்களில் - அவை ஆதிக்க மனநிலையின் வெளிப்பாடுகளாகவே இருந்தபோதும் - எள்ளலாகவும் நகைச்சுவையாகவும் இறுமாப்புடனும் எம் மக்களைப்பற்றி எழுதப்பட்ட பல குறிப்புகள் இந்த அடிப்படையில் எமக்கு மிகவும் உதவக்கூடியன.

நவீன காலத்துக்கு முன்னர் திருகோணமலை பெற்றிருந்த முக்கியத்துவத்துக்கு மேலதிகமாக, நவீன காலத்தின் ஆரம்பம் தொடக்கம் இரண்டாம் உலகப்போரின் முடிவு வரைக்கும்கூட திருகோணமலையின் இடம்சார் அரசியல் முக்கியத்துவத்துக்கு இந்நூலில் தொகுக்கப்பட்ட ஆவணங்கள் மிக அழுத்தமான சாட்சியங்களாகும். திருகோண மலையின் முக்கியத்துவம் குறித்து எழுதப்பட்டுள்ள பல குறிப்புகள் அங்கே பிறந்து வளர்ந்த எனக்கே கூட அதிர்ச்சியும் வியப்பும் அளிப்பனவாகவே இருந்தன. போர்த்துக்கல், ஒல்லாந்து, பிருத்தானியா, பிரான்சு, செருமனி, சப்பான் போன்ற நாடுகள் திருகோணமலைக்காக பயங்கரமான

(பக்கம் 6ல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரசின்
# உலக வலம்

## அமெரிக்க சட்ட நடவடிக்கையைச் சமரசம் செய்தது கூகுள் தேடுதளம்

பத்தொன்பது மாதங்களாகத் தொடர்ந்த விசாரணைகளின் முடிவில் கூகுள் தேடுதளத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்ற முடிவை அமெரிக்க வர்த்தகச் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

விசாரணைகளின் முடிவில் கூகுள் தேடுதளம் தனது உற்பத்திப் பொருட்களுக்கும் தனது விளம்பர தாரர்களுக்கும் மட்டும் சார்பான நிலைப்பாட்டை தளங்களைத் தேட கூகுள் தேடு தளத்தினுள் நுழைபவர்களுக்கு அளிக்கவில்லை என்ற முடிவிற்கு அமெரிக்க வர்த்தகச் சம்மேளனம் வந்துள்ளது. இதனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## இந்தியாவில் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள பெண் வன்புணர்வார்கள்

புதுடெல்லியின் பெண் வன்புணர்வுக் கொலையாளிகள் கடத்தல், வன்புணர்வு மற்றும் கொலை ஆகிய மூன்று குற்றங்களின் கீழ் மரணதண்டனையை எதிர்நோக்க உள்ளனர்.

இந்தியாவையும் உலகையும் அதிரவைத்த 23வயதுடைய மருத்துவக் கல்லூரி மாணவியினைக் கடத்தி வன்புணர்வுக்குள்ளாக்கி அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஐந்து இந்தியர்கள் கைதாகியுள்ளனர். இவர்களை விசாரிக்கவென விசேடமாக அமைக்கப்பட்ட அதிவேக விசாரணை நீதிமன்றிலேயே இவர்களுக்கெதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களுடன் கைதான ஆறாவது குற்றவாளியாளி பராயமடையாத சிறுவனின் எழும்பு மச்சையானது பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இம் மச்சைப் பரிசோதனையிலிருந்து அந்த ஆறாவது குற்றவாளி பராயமடையாதவரா அல்லது பராயமடைந்தவரா என்பது தெரியவந்ததன் பின்னரேயே அவருக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கலாக வுள்ளது.

அக்குற்றவாளி பராயம் அடையாதவராயின் அவருக்கு மரணதண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிக்கப்பட முடியாது. அவர் சீர்திருத்தப் பள்ளிக்கே அனுப்பப்படும் சாத்தியம் உள்ளது.

## பாகிஸ்தானிய பிரிவினைவாதத் தலைவரைக் கொலை செய்தது அமெரிக்க ஆளில்லா விமானம்

ஆப்கானின் தலிபான்களுடன் தொடர்பைக் கொண்டிருந்த பாகிஸ்தானிய தளபதி முல்லா நஸீர் என்பவரைத் தமது ஆளில்லா விமானத் தாக்குதல் மூலம் கொலை செய்துள்ளதாக அமெரிக்க ஆதாரங்களைக் கொண்டு பாகிஸ்தானிய உளவுப் பிரிவு தகவல்களை கசியவிட்டுள்ளது.

தென் வசிரிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களில் தளபதியுட்பட ஆகக் குறைந்தது ஒன்பது தலிபான்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

தற்போதுவரை இறந்தவர்கள் உண்மையில் யாரென உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிய வருகின்றது. 2004ம் ஆண்டிலிருந்து ஆளில்லா விமானத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட பொது மக்களின் தொகை பாகிஸ்தானில் மட்டும் சுமார் 2562 லிருந்து 3325 என பாகிஸ்தானிய சட்ட நிறுவனம் ஒன்றின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க பாடசாலைச் சூட்டுச் சம்பவத்தில் தப்பியவர்கள் பாடசாலைக்குத் திரும்பினர்

கடந்த மாதத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான 20 சிறார்களின் பாடசாலையான சாண்டி ஹுக் பாடசாலையின் ஏனைய சிறார்கள் பாடசாலைக்கு 03.வு.2012ல் வருகை தந்திருந்தனர்.

இருபது வயதான அடம் லன்ஸா என்ற இளைஞனின் விபரீத நடவடிக்கையால் 27 பேர் கடந்த மாதம் சுட்டுக் கொள்ளப்பட்டனர். கொல்லப் பட்டவர்களில் அடம் லன்ஸாவின் தாயும் ஏனைய 6 பேரும், 20 பள்ளிச் சிறார்களும் அடங்குவர்.

தனது வீட்டில் தாயைச் சுட்டுக் கொன்ற அடம் ஏன் இந்தச் சிறுவர் பள்ளியைத் தேர்வு செய்து துப்பாக்கிச் சூட்டை நடத்தினான் என்பது தற்போது வரை புரியாத புதிராகவே உள்ளது.

## போல்க்லாண்ட் தீவுகள் தொடர்பாக ஐக்கிய ராச்சியமும் ஆர்ஜென்டீனாவும் முரண்பாடு

போல்க்லாண்ட் தீவுகள் விடயத்தில் இராச்சிய உரிமை தொடர்பாக ஏற்கனவே முரண்பட்டுக் கொண்டிருக்கும் ஐக்கிய இராச்சியமும் ஆர்ஜென்டீனாவும் அவ் விடயம் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட மறுத்துள்ளன.

ஆர்ஜென்டீன சனாதிபதி தனது உரையில் ஐக்கிய இராச்சியம் மீண்டும் தனது 'கண்டிக்கத்தக்க காலனித்துவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

1982ல் ஆர்ஜென்டீன இராணுவ அரசானது தனது படைகளை இத்தீவுகளில் நிறுத்தியதைத் தொடர்ந்து அங்கு போர் ஏற்பட்டிருந்தது.

தென் அந்திலாந்திக கடலில் காணப்படும் இத்தீவுகள் அவற்றின் அமைவிடத்தாலும் அவற்றில் காணப்படும் இயற்கை வளங்களாலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

1820ம் ஆண்டில் தன்னுடையது என ஆர்ஜென்டீன அரசால் உரிமை கோரப்பட்ட இத்தீவுகள் 1765ம் ஆண்டிலிருந்து பிரித்தானிய ஆளுகைக்கு உட்பட்டுள்ளன.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. எமது வீட்டிற்கு நேரடியாகக் கிடைக்கக் கூடிய சேவை ஒன்று
   1. போக்குவரத்து 2. மருத்துவம் 3. தபால்
2. மின்சாரத்தைச் சிக்கனமாகப்பாவிக்க பயன்படுத்தக்கூடிய மின்குமிழ்
   1. மெக்குரி மின்குமிழ் 2. புளோர் ஒளிர் மின்குமிழ்
   3. நிப்போன் மின்குமிழ்
3. பொதி செய்யப்பட்டுள்ள உணவுப் பொதியினுள் சிலிக்கா ஜெல் வைப்பதன் நோக்கம்
   1. நிறம் மாறாது 2. சுவைக்கு 3. பொதியிலுள்ள வளியை உறிஞ்சியெடுக்க
4. நாற்றுமேடை அமைத்து புதிய தாவரத்தைப் பெறுபவர். கழுவிய பின்னரே சமைப்பதற்கு வெட்டுவர். செடியில் காய்க்கும் காயாகும். இக்கூற்றுக்களுக்குப் பொருத்தமான காய் எது?
   1. பீற்ருட் 2. தக்காளி 3. வெண்டி
5. மாம்பழம் - சதை எனின், தோடம்பழம் .................
   1. சுளை 2. வித்து 3. சோறு
6. "அமாவாசை தினமன்று பூரண சந்திரனைக் கண்டேன்" இக்கூற்று பிழையாவதற்கான காரணம்?
   1. அமாவாசை என்பது ஏற்படாது 2. பூரண சந்திரன் என்பது இல்லை
   3. பூரண சந்திரன் அமாவாசை தினத்தில் தோன்றாது.
7. எல்லா முலையூட்டிகளுக்கும் பொதுவான இயல்பு
   1. குட்டியீனுதல் 2. பாலூட்டுதல் 3. நிலத்தில் வாழ்தல்
8. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பதன் பொருளைக் கூறுவது எது?
   1. உணவிற்கு உப்பினை அதிகமாகப் போட்டவரை மறக்கக்கூடாது.
   2. நன்றி மறத்தல் கூடாது. 3. உப்பில்லாமல் சாப்பிடமுடியாது
9. "கூண்டில் இருந்த அணில் இட்ட முட்டைகளை பாம்பு வந்து விழுங்கியது."
   இக்கூற்று பிழையாவதற்கான காரணம் யாது?
   1. அணில் முட்டையிடுவதில்லை 2. அணில், பாம்பிற்குப் பயமில்லை
   3. அணிலின் கூண்டினுள் பாம்பிற்குச் செல்ல முடியாது.
10. குரங்கு - அலப்பும் என்பது போல எருமை ....................
    1. கத்தும் 2. முக்காரமிடும் 3. எக்காரமிடும்.
11. சதா மிகவும் கெட்டிக்கார மாணவன். எனினும் அவன் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. இதற்கான காரணமாக அமைவது?
    1. அவன் எதிர்பார்த்ததை விட வினாக்கள் இலகுவாக இருந்தமை.
    2. அவன் மீது ஏனைய மாணவர்கள் காட்டிய வெறுப்பு
    3. அவன் சரியான விடைகளை எழுதாமை
12. கீழ் உள்ள வாக்கியத்தில் பிழையாக எழுதப்பட்டுள்ள வாக்கியம் எது?
    1. ரோஜாச் செடியில் முள்கள் உள்ளன. 2. ரோஜாச்செடி முள் உடையது
    3. ரோஜாச் செடியில் முட்கள் உள்ளன.
13. இலங்கையில் கலாச்சார முக்கோணவலயங்கள் அமைந்துள்ள நகரங்கள்?
    1. கண்டி, கொழும்பு, காலி 2. கண்டி, பொலநறுவை, அனுராதபுரம்
    3. காலி, அம்பாறை, புத்தளம்
14. தோட்டத்தில் உள்ள தாவரம் ஒன்றை ஒளிபுகாத ஒரு பாத்திரத்தில் மூடி ஒரு வாரத்தின் பின் பாத்திரத்தை அகற்றி தாவரத்தை அவதானித்த போது தாவரத்தில் ஏற்பட்ட மாற்றம் யாது?
    1. தாவர இலைகள் வெளுறிக் காணப்படும் 2. தாவரம் இறந்துவிடும்
    3. தாவர இலைகள் செழிப்பாகக் காணப்படும்.

**15, 16ம் வினாக்களுக்கு கீழேயுள்ள தகவல்களை வாசித்து விடையளிக்குக.**

50 மீற்றர் நடைப்போட்டி ஒன்றில் 6 மாணவர்கள் தமது போட்டியினை நிறைவு செய்த காலம் கீழே தரப்பட்டுள்ளது.

| சஞ்சு | டோலி | அம்மு | ஞானன் | வரன் | அமுதன் |
|---|---|---|---|---|---|
| 20.15 | 23.25 | 19.5 | 20 | 20.15 | 22.05 |

15. இப்போட்டியில் முதலாம் மற்றும் கடைசி இடங்களைப் பெற்றவர்கள் முறையே
    1. டோலி, அம்மு 2. அம்மு, சஞ்சு 3. அம்மு, டோலி
16. இவ்வீரர்களின் போட்டி முடிவுகளை பின்னிருந்து எழுதியிருப்பின் சரியான விடை
    1. அம்மு, அமுதன், டோலி, சஞ்சு, அமுதன், ஞானன்
    2. டோலி, அமுதன், சஞ்சு, வரன், ஞானன், அம்மு
    3. அம்மு, ஞானன், ஸ்ரீவரன், சஞ்சு, அமுதன், டோலி

\- பிரதீபா -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலை விதிக் கேள்வி – எவ்வாறு ?

- மாயன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டில் எதிர்கொள்ளும் அடுத்த ஆபத்தாக நாம் கருதுவது அதற்கு எதிரான கட்சிகளின் நடவடிக்கைகள் ஆகும்.

ஏற்கனவே நாம் கலந்துரையாடியதன் படி, சரியும் மக்கட் செல்வாக்கினுள் உள்நுழைய விரும்பும் பல கட்சிகளுக்குள் அரச கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், வடக்கில் உத்வேகத்துடன் செயற்பட்டு வரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும், கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளையும் கருதலாம்.

தமிழர்கயின் வாக்கினைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் ஆளும் கட்சியின் செயற்பாட்டுத் தந்திரோபாயம் (Functional Strategy) எதுவெனத் தெளிவாகப் புரிந்து கொள்தல் முக்கியமானது.

அரசின் செயற்பாட்டுத் தந்திரோபாயம் இரண்டு முக்கிய இலக்குகளைக் குறியாகக் கொண்டு நகர்வது இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டும். முதலாவது நேரடியாகவே கணிசமான அளவு தமிழர்களின் வாக்குகளை கவரும் செயற்பாடாகவும் இரண்டாவது மேற்கூறப்பட்ட அரசின் ஆதரவுக் கட்சிகளின் ஊடாக வாக்குகளைக் கவரும் செயற்பாடாகவும் உள்ளது. இவ்விரண்டு செயற்பாடுகள் ஊடாகவும் ஏற்படும் ஆபத்தானது தற்காலிகமானதாகவும், தளம்பலடையக் கூடியதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனெனில் வாக்குகளைக் கவருவதில் வெற்றியென்பது வாக்காளனின் அந்நேர மனநிலையிலேயே பெருமளவு தங்கியிருக்கின்றது. வாக்காளப் பெருமக்களில் ஒரு பகுதியினர் நிலையான விருப்புடன் எதிர்பார்ப்புக்கள் எவையுமின்றி தாம் தேர்வு செய்த கட்சிக்கே ஆண்டாண்டுகளாக வாக்களித்து வருகின்றனர். எனினும் இவ்வாறான நிலையுள்ள மக்களின் மனநிலையும் தற்போது மாறத் தொடங்கியுள்ளதோ? என்றும் எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகள் எனச் சொல்லப்படும் பிரதேசங்களில் கூட தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது கொடியை ஏற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறாயின் ஏன் தமது உறுதியான தளங்களில் கூட ஓர் அரசியற்கட்சி தனது பலத்தை இழக்கின்றது? என்ற ஆய்வில் வெளியாகும் விடயம் யாதெனில், அரசியல் கட்சிகளின் இலக்கு வாக்காளரின் "பொருளாதாரப் பலம்" (Wealthy) என்னும் காரணியே அவ்வாக்காளன் எந்த அரசியல் கட்சியை ஆதரிப்பது என்பதை தீர்மானிக்கின்றது என்பதாகும்.

பொருளாதாரத்தில் சற்று நிரந்தரமான பலமுள்ளவர்கள் தமது ஆதரவு அரசியற் கட்சிகளை எப்போதுமே, அவை ஆட்சியில் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, ஆதரிப்பவர்களாகவே உள்ளனர். அதற்குரிய சரியான உதாரணமாக கொழும்பு மாநகர சபையை எப்போதுமே ஐக்கிய தேசியக் கட்சியே தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதைக் கொள்ளலாம்.

பலவீனமான பொருளாதார பலமுள்ளவர்கள் நிலைமைக்கேற்பத் தாளமாடும் பண்பைக் கொண்டிருப்பதால் அவர்களின் வாக்குகள் யாருக்குச் செல்லும் என்பதில் குறுங்காலப் பொருளாதாரக் காரணிகளே செல்வாக்குச் செலுத்துகின்றதனை அனுமானிக்க முடியும். தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் உருவாக்கப்படும், அவர்களுக்கான பொருளாதார நலன்கள் இவ் விடயத்தில் பெரும்பங்காற்றும். இங்கு நினைவிற் கொள்ளவேண்டிய மிகப்பெரும் விடயம் யாதெனில் பொருளாதார நிலை சற்றேனும் பலமானவர்களின் விகிதத்தை விட தளம்பலான பொருளாதார நிலையைக் கொண்ட மக்களின் விகிதாசாரம் இரண்டு மடங்கு அதிகமாக இலங்கையின் சனத்தொகையில் காணப்படுகின்றமை ஆகும். எனவே வடக்கிலும் கிழக்கிலும் அரசு இவ்வாறான தளம்பல் வருமான நிலையுடைய மக்களைக் குறிவைத்து நகருவதால் வாக்காளர்களைத் தம்மகத்தே திரட்டும் முயற்சியில் குறுங்காலப் பொருளாதார நலன்களை வாரியிறைக்க பேரினவாத அரசு முயல்வது தெரிகின்றது.

முதலிரு வகைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான தமிழர்களை தாம் நேரடியாகவும், தம்மிடமுள்ள தமிழ் கட்சிகள் ஊடாகவும் தமது பக்கம் திருப்ப முயற்சிக்கும் அரசு இந்நடவடிக்கைக்குச் சமாந்தரமாக மற்றோர் நடவடிக்கையையும் செயற்படுத்தி வருகின்றது.

அந்நடவடிக்கையானது தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் பரம்பலை அதிகரிப்பதன் ஊடாக தமிழர் வாக்குகளின் தேர்வு வலுவைக் குறைத்துவிடுவதைக் குறிக்கலாம். இந்த ஆபத்தானது நிரந்தரமானதாகவும் தளம்பலடையாமலும் இருப்பதால் நீண்டகால அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாதிக்கும் ஆபத்தாக இருக்கின்றது.

இந்த முயற்சி கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம் அதனைத் தடுப்பதற்கான நியாயமான காரணங்களைத் தமிழர் தரப்பு கொண்டுள்ள போதும் சட்டப்டியான காரணங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. உதாரணமாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத்தின் அடிப்படையில் வடக்கில் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டதைக் குறிக்கலாம்.

அடுத்த ஆபத்து தொடர்பாக மறு வாரம் பேசுவோம்.

## காலனித்துவ . . .

சதுரங்க விளையாட்டை ஆடியிருக்கின்றன. இடையறாத போர்க்களங்களைச் சந்தித்திருக்கின்றன. அந்த அரசியல் போட்டிக்களத்தின் உள்ளிருந்து வழங்கப்பட்டுள்ள இந்த வாக்குமூலங்கள் எமக்கு மிகவும் அவசியமான அரசியற் செய்திகளைக் கொண்டுள்ளன.

இன்று மேற்சொன்னவற்றை விட அதிக எண்ணிக்கையான வல்லரசுகள் போட்டியிடும் களமாக திருகோணமலை மாறியிருக்கிறது. இந்தத் திருகோணமலை எம் காலத்து இலங்கை, பிராந்திய அரசியலில் சடுதியான மாற்றங்களுக்கு காரணமாகியிருக்கிறது. தவிர்க்கமுடியாத இடம்சார் அரசியல் வகிபாகத்தினை ஆற்றிக் கொண்டிருக்கிறது.

உண்மையில் இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் தனியான அறிமுகக்குறிப்பு அவசியமாகிறது. இந்நூல் ஓர் ஆய்வு நூலாக அமைவதற்கு மேலதிகமாக, செய்யப்படவேண்டிய பல ஆய்வுகளுக்கு மூல நூலாக அமைகிறது. இந்நூலை மூலமாக வைத்து ஆய்வுகள் பல செய்யப்படவேண்டிய தேவை ஒருபுறமிருக்க இந்நூலின் உள்ளடக்கமாக அமையும் விடயங்கள் பரந்தளவில் ஈழத்தமிழ்ச்சூழலில் கதைக்கப்படவேண்டியவையாக உள்ளன.இந்நூலில் உள்ள இரண்டாம் உலகப்போர்காலத்து சப்பானின் குண்டுத்தாக்குதல் தொடர்பான அத்தியாயம் தினக்குரல் வார இதழில் தொடர்ச்சியாக வெளிவந்தது. திருகோணமலை மீது சப்பான் நடத்திய தாக்குதலை நிமிடத்துக்குநிமிடம் வழங்கப்படும் வர்ணனையாக ஆசிரியர் தருகிறார்.

ஒல்லாந்த ஆளுநராகவிருந்த வான் சாண்டனின் நாட்குறிப்பு திருகோணமலை தொடர்பான மிகப்பெறுமதியான ஆவணமாகும். அவ் வாளுநர் திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு அலுவல் நிமித்தம் சுற்றுலா சென்று தன் அனுபவங்களை மிகச்சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார். திருகோணமலை மாவட்டத்தின் குடிசனப்பரம்பல், வாழ்வியல், தொழில், அரசியல், முக்கியத்துவமிக்க இடங்கள் என்று அந்நாட்குறிப்பெங்கணும் பெறுமதியான குறிப்புக்கள் விரவிக்கிடக்கின்றன.

அலெக்சண்டர் போன்றவர்களது குறிப்புக்கள் திமிருடனும் எள்ளலுடனும் எழுதப்பட்டிருந்தபோதும் மலபார்கள் என்று அழைக்கப்பட்ட திருகோணமலை வாழ் தமிழர்களின் வாழ்க்கையை, இயல்புகளைத் தயவுதாட்சண்யமின்றிப் பதிவு செய்கிறது. பிரித்தானியச் சிப்பாய்களுக்கு கல்லெறிவது தொடக்கம் கோட்டையில் மாட்டிவிட்டு சாட்டையடி வாங்கிக்கொடுப்பது வரை உள்ளூர் மக்கள் செய்த அட்டகாசங்கள் சுவையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. திருகோணமலையில் காணப்பட்ட சாதியம் தொடர்பான குறிப்புக்களும் சுவையானவை. எல்லா மக்களுக்கும் ஒரே பெறுமதி வரி விதிக்கப்பட்டபோது வெள்ளாளர்கள் இதனால் எரிச்சலுற்று குறைந்த சாதியினருக்கு விதிக்கப பட்டதிலும் கூடிய வரியினைத் தமக்கு விதிக்குமாறு கேட்டுக்கொண்ட தகவல் ஆர்வமூட்டியது.

ஆங்காங்கே தென்படும் இலக்கணப் பிழைகள் - குறிப்பாக ஆளுநர் வான் சாண்டனின் நாட்குறிப்பில் உள்ளவை- பொருள் மயக்கத்தினைக் கூட ஏற்படுத்துமளவுக்குச் சிற்சில இடங்களில் தூக்கலாகத் தென்படுகின்றன. படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தால் இந்நூல் இன்னமும் சிறப்பாக அமைந்திருக்கும்.

நூலாசிரியர் இந்நூலுக்கென தனியான வலைத்தளம் ஒன்றினை உருவாக்கி அதில் தேவையான வரைபடங்கள், ஒளிப்படங்களைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். அவ்வலைத்தளத்தையே இந்நூல் பற்றிய உரையாடல்களின் நடுவமாகவும் மாற்ற முடியும்.

இந்நூலை எழுதுவதற்கு நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சியும் செலுத்திய உழைப்பும் சாதாரணமானதாக இருந்திருக்க முடியாது.

## ஊமையின் பாடல்

நீ போயிருப்பாய். . . .

ஒரு தொலைபேசி அழைப்பின்றி....

பிரிவு
அனுதாபமின்றி .. ..

வெண்நிறப் பஞ்சு மேகங்களை
கனத்த அலுமினியச் சிறகினால்
வெட்டியுதிரம்
சொட்டச்சொட்ட..

நீ பறந்திருப்பாய்..

ஒரு நாள்..

அந்த ஒருநாளில்..

அதிகாலைக் குளிர்பனியில்
என் அறை சன்னலின் ஊடே
சிறியச் சூரிய ஒளியாய்
பனியையும் என் மனதையும்
ஒருங்கே சிதரச் செய்த – நீ

பின்னரும் பல நாட்களில்
என் புலன்களைப்
புன்னகையால்
கபளீகரம் செய்த – நீ

பின்னிரவின் தூக்கமாய்
முழு நிலவின் ஒளிர்கற்றாய்
கன்னி மழைத்துளியாய்
என்னுள்ளேயிறங்கி
உடலில் உழன்று
உயிர் பிரியும் வலியுடன்

தெரு முனையிற்
திரும்பி மறையும் - நீ

போயிருப்பாய்.. .. ..

அலுமினியப் பறவையின்
கனத்த சிறகால்
பஞ்சு மேகங்களையும்

என்
நெஞ்சுக்கூட்டையும்
ஒரு சேரச் சிதைத்து

நீ போயிருப்பாய்...

பின்னொரு நாளில்
என்நினைவின்றி
வெந்நிற ஆணின்
கோதுமை நிறத் தோள்களைப்
பற்றிப்
பேரொலியெழுப்பும்
டிரம்களின் தாளத்தில்

என் நினைவின்றி நீ

பின்னிப் பிணைந்தாடுவாய்...

இங்கு
உன் நினைவின்றி நான்
உயிர்த்திருப்பேனோ...?

உயிரே

உனக்காக என் காத்திருப்பை
வெளிப்படுத்த முடியாது.

ஏனெனில்

எனக்கான உன் காதலையே
உன்னிடம்
வெளிப்படுத்தாத போது..?

சஞ்சுதன்
25-08-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிநிதித்துவத்தை....

விசேடமாகக் கிழக்கு மாகாணத்தின் திருக்கோணமலை மாவட்டத்தில் எவ்வாறுள்ளது என அறிவதற்காக மலைமுரசு அவரைத் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் திருக்கோணமலை மாவட்டத்தில் தற்போதுள்ள மொத்த உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 118 ஆக உள்ளது. எனினும் இத்தொகை புதிய வட்டாரத் தேர்தல் முறையின் ஊடாக 171ஆக அதிகரிக்கப்படவுள்ளது. இந் 171 அங்கத்தவர்களும் இரண்டு அடிப்படைகளில் தேர்வு செய்யப்படவுள்ளனர். அவை முறையே வாக்குகளின் அடிப்படையிலும் இன விகிதாசாரத்தின் அடிப்படையிலுமாகும். இவ்வாறு பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தமிழர்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் தற்போதுள்ள அளவிலேயே பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பேணுவோமானால் தமிழர்கள் தற்போது பெரும்பான்மையாகவுள்ள உள்ளூராட்சி சபைகளின் பெரும்பான்மையை இழக்க வேண்டியேற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்து தற்போது எத்தனை உள்ளூராட்சி சபைகளில் தமிழர் பிரதிநிதித்துவம் பெரும்பான்மையாகவுள்ளது என்ற கேள்விக்கு அவர் விடையளித்த போது தற்போது திருமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. அவற்றுள் நகரசபைகளாக திருமலை நகரசபையும், கிண்ணியா நகரசபையும் காணப்படுகின்றன. பிரதேச சபைகளாக பட்டணமும் சூழலும் ( உப்புவெளி), வெருகல், கிண்ணியா, முதலிக்குளம் (மொரவெவ), தம்பலகமம், குமரக்கடவை (கோமரன்கடவெல), பதவிசிறிபுர, மூதூர், சேருவிலை, குச்சவெளி மற்றும் கந்தளாய் ஆகியவை ஆகும். இப்பதின்மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் திருமலை நகரசபை மற்றும் உப்புவெளி பிரதேச சபை, வெருகல் பிரதேசசபை ஆகிய மூன்றிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார். எனினும் ஏனைய பிரதேசசபைகளில் தமிழர்களின் குடிப்பரம்பலுக்கு ஏற்ப அங்கத்தவர்கள் தெரிவாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சரியான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வது தொடர்பாக மக்களுக்கு இருக்கும் பங்கு என்ன என்று வினவிய போது அதற்குப் பதிலளித்த கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் மக்கள் முதலில் வட்டாரப் பிரிப்பு தொடர்பான தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அச்சமின்றி வெளிக்கொணர அரசு சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாக தெரிவித்தார். அச்சந்தர்ப்பமானது மக்கள் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எழுத்தில் எழுதி செயலாளர், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, 330 யூனியன் பிளேஸ், கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அஃதில்லாவிட்டால் திருக்கோணமலை மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) கச்சேரி, நாலாம் கட்டை, திருக்கோணமலை என்ற முகவரிக்கோ அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து மக்கள் பெரும்பாலும் தாமாக அவ்வாறு சிந்தித்துச் செயற்படாது விட்டால் மாற்று நடவடிக்கையாக என்ன செய்துள்ளீர்கள் என வினவிய போது தமது கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், முன்னைய உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்ற அனைவரையும் உள்ளடக்கி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாகவும் அவற்றின் வட்டாரப் பிரிப்புக்கள் தொடர்பாகவும் செயலமர்வு ஒன்றை நடாத்தி அவர்களுக்கான அறிவை விருத்தி செய்து விடுதல் தமது முதலாவது நடவடிக்கையாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர் அவ்வாறு அறிவைப் பெற்றுக் கொண்டவர்கள் தமது பிரதேசத்திலுள்ள மக்களுடன் அவ்விடயங்களைப் பகிர்ந்துகொள்வதன் ஊடாக அவர்களிடமிருந்தும் தகவல்களைப் பெற்று அறிக்கை வடிவில் சமர்ப்பிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

### உல்லாசப் பயணிகளுக்காய்

கிழக்கு மாகாணத்தின் ஏனைய இரண்டு மாவட்டங்களிலும் கூட இவ்வகைத் தூண்களை நிறுவிட மாகாணசபையின் 24ம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

சமாதானச் சூழலில் பெருமளவு உல்லாசப் பயணிகள் கிழக்கிற்கு வருகை தருவதால் அதனை மேலும் ஊக்குவித்து மாகாண வருமானத்தைப் பெருக்கும் நோக்குடனேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### வெள்ளத்தால் சேதமடைந்த

அசாதாரண வானிலையால் அழிவுகளை எதிர்கொண்டுள்ள கிழக்கு மாகாணத்தின் வீதிகள், நீர்பாசனத் திட்டங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட சேத விபரங்களும் திரட்டப்பட்டு அவற்றைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டறிக்கை தயாராக்கப்பட்டு வருவதாகவும் மாகாண சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்மதிப்பீட்டறிக்கையின் அடிப்படையில் மாகாண சபையால் விடுவிக்கப்படவுள்ள விசேட நிதியின் ஊடாக புனர்நிர்மாண வேலைகள் புத்தாண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும் எனவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### மாகாணசபை உறுப்பினர்களுக்கு. . .

சமூகமளிப்பதால் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யும் பொருட்டும் வருகைக் கொடுப்பனவுகளை வழங்க கிழக்கின் மாகாணசபை தீர்மானமியற்றியுள்ளது.

இத் தீர்மானப்படி நெடுந்தூரமான அம்பாறையிலிருந்து வருகைதரும் அங்கத்தவர்களுக்கு நாளொன்றுக்கு முறையே 9,000 ரூபாவும், மட்டக்களப்பிலிருந்து வருகை தருபவர்களுக்கு நாளொன்றுக்கு 7,000ம் ரூபாவும், திருக்கோணமலை அங்கத்தவர்களுக்கு நாளொன்றுக்கு 5,000ம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்திற்கான முன்மொழிவை கிழக்கின் முதலமைச்சர் கௌரவ நஜீப் அவர்கள் மேற்கொள்ள அங்கீகாரத்தை மாகாண அமைச்சரவை வழங்கியுள்ளது.

### மாவட்ட மட்டத்தில்

இக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு முறை கிழக்கின் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், அம்பாறையிலும் நடாத்தப்படவுள்ளன. இவ்வாறு மாவட்ட மட்டத்தில் மாகாணசபையினை ஒழுங்கமைப்பது கிழக்கு மாகாண சபைக்கு முற்றிலும் புதுமையான ஒன்றே. ஏனெனில் இதற்கு முன் எப்போதுமே இவ்வாறான கூட்டங்கள் நடைபெறுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ் உதுமாலெப்பை சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திலேயே இதற்கான முன்மொழிவைச் செய்திருந்தார். அதனை கடந்த 24ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே 2013ம் ஆண்டில் மாவட்டங்களை நோக்கி மாகாண சபையின் அதிகாரம் மிக்க அலகுகள் பரவவுள்ளன.

திணைக்களத் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபையின் செயலாளர் ஆகியோர் உட்பட மாகாண சபையின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் இக் கூட்டங்களில் பங்குபற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்தாண்டில் புத்துணர்ச்சி

இவ்விடயம் தொடர்பான பேச்சுவார்த்தை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கம், கொமன் கிரவுண்ட் நிறுவனம், ஐரோப்பிய வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உவர்மலை தேன்தமிழ் வீதியிலுள்ள ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தற்போதுள்ள ஊடக இல்லத்தை விகாரை வீதியிலுள்ள புதிய கட்டிடத்திற்கு இடம்மாற்றுவது, ஊடகவியலாளர்களுக்கு உபகரணங்களை பெற்றுக்கொடுப்பது, பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது, ஊடகவியலாளர்கள் விரும்பிய நேரத்தில் இல்லத்திற்கு சென்று சலுகைகளை பெற்றுக் கொள்ளும் வசதிகளை மேற்கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# திருமலையின் இளங்குருத்து . . .

சவூதி அரேபிய நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானா நபீக் விடுவிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் எழுந்துள்ளதாக இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சின் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்ட விபரம் வெளியாகியுள்ளது. சவூதி அரேபியத் தூதுவருக்கும் இலங்கையின் நீதி அமைச்சருக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாசனையிலே இவ்விடயத்தை தூதுவர் நீதி அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

பராமரிப்பிற்காகத் தன்னிடம் வழங்கப்பட்ட கைக்குழந்தையைக் கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் திருமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த பணிப் பெண்ணாக சவூதி அரேபியாவிற்குச் சென்றிருந்த ரிசானா நபீக்கிற்கு அந்நாட்டின் நீதிமன்றம் மரண தண்டனையை விதித்திருந்தது.

மே மாதம் 2005 ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தக் கொலைக்கான 16 ஜூன் 2007ல் மரண தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் இத் தீர்ப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருந்தது. அத்துடன் சர்வதேச நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புக்களும் இவ்விடயத்தில் கடும் அதிருப்தியை சவூதி அரசிற்கு தெரியப்படுத்தியிருந்தன. அதனைத் தொடர்ந்து இவ்வழக்கானது சவூதி அரசின் மீயுயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கும் சரியான முடிவினைப் பெறமுடியாது போகவே இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பை ஒக்டோபர் 2010 ல் சவூதி மன்னரிடம் நீதிமன்றம் பாரப்படுத்தியுள்ளது. சவூதி மன்னர் இத் தீர்ப்பை வலுவாக்குவாராயின் ரிசானாவின் தலை சீவப்படும் அபாயம் காணப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரங்கள் முழுவதையும் பறிகொடுத்த மூதூரின் சாபி நகரைச் சேர்ந்த ரிசானாவின் குடும்பம் மிக வறிய நிலையிலேயே உள்ளது. அவ்வறுமையைப் போக்கவே ரிசானா சவூதியில் வீட்டுப்பணிப் பெண்ணாக உப முகவர்களால் கடத்தப்பட்டுள்ளார். ஏனெனில் அவர் சிறுமியாக இருந்த போதே அவரது கடவுச் சீட்டில் சுமார் 8 வயதினை அதிகமாகக் காட்டி வேலைவாய்ப்பு முகவர்கள் அவரை சவூதி அரேபியாவிற்குப் பணிப் பெண்ணாக அனுப்பியுள்ளனர்.

சுமார் 17வயதில் பணிப் பெண்ணாகச் சென்ற ரிசானாவிடம் நான்கு மாதங்களான சிசுவிற்குப் பாலூட்டும் பணி வழங்கப்பட்ட அன்று அவர் பாலூட்டியபோது பால் புறைக்கேறி குழந்தை மரணமாகியுள்ளது.

அதைத் தொடர்ந்து கொலைக் குற்றச்சாட்டில் கைதான ரிசானா உரிய மொழிபெயர்ப்பாளர்களின்மையால் தனது பக்க நியாயத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பை இழந்திருந்ததுடன் காவல்த்துறை அலுவலகத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அத்துடன் அக்குழந்தையின் கழுத்தைத் திருகிக் கொலை செய்ததாகவே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் வாக்குமூலத்தை சவூதியின் காவல்த்துறை தன்னை இடுப்புப் பட்டியால் தாக்கியும் பயமுறுத்தியுமே பெற்றதாக ரிசானா தனது வாக்குமூலத்தில் பின்னர் தெரிவித்துள்ளார் என ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அத்துடன் அவ்வறிக்கையானது குழந்தைக்குப் பாலூட்டும் போது குழந்தையின் மூக்காலும் வாயாலும் பால் வழிந்ததாகவும் அதனைத் தொடர்ந்தே தான் குழந்தையின் கழுத்தை மிகஅவதானமாகத் திருப்பியதாகவும் கூறிய ரிசானாவின் வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளது. அவ்வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆசிய மனிதவுரிமைச் சபை சுவீடன் நாட்டின் தலைசிறந்த குழந்தைநல வைத்தியரைத் தொடர்பு கொண்ட போது கழுத்தைத் திருப்பும் முன்னரே வாயாலும் மூக்காலும் பால் வடிந்துள்ளதால் அக்கணத்திலேயே குழந்தை இறந்திருக்கும் வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இம் மரணதண்டனை தொடர்பாக இலங்கையின் சனாதிபதியால் அனுப்பிவைக்கப்பட்ட கருணை மனுவை சவூதியின் அரசர் சாதகமான முறையில் கையாள்வதால் விரைவில் ரிசானா விடுவிக்கப்படும் வாய்ப்புண்டு எனத் தூதுவர் தெரிவித்துள்ளார். அத்துடன் குழந்தையை இழந்த சவூதியின் குடும்பத்தாருடனும் சாதகமான முறையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## - கல்வித் திறனும் அன்பும் -

கல்வி என்பது அறிவுசார்ந்த விடயம். கல்வியில் உங்கள் பிள்ளைகள் மேம்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து யாருக்கும் இல்லையென்ற போதிலும் கல்வித்திறனை மட்டும் அடிப்படையாக வைத்து பிள்ளைகளின் அன்பு தீர்மானிக்கப்படுவதுதான் வருத்தமானது.

ஒரு தனியார் வகுப்பு ஆசிரியருக்கு இருக்கும் அக்கறைக்கூட சில சமயம் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளைகள் மீது இல்லாதது வேதனையான ஆச்சரியமே சிந்தித்துப்பாருங்கள் இன்று படிக்கவில்லையென்பதற்காக அவர்கள் மீது கோபமும் எரிச்சலும் வருத்தமும் அடையும் நாம். அவர்கள் பிறக்காமல் நமக்கு பெற்றோர்களாகும் வாய்ப்பை ஏற்படுத்தா விட்டால்..?

இந்த சமூகத்தில், நம் மீதான விமர்சனம் எத்தகையது? குடும்ப சூழல், உறவினர் மத்தியில் நமக்கான பெயர் எப்படி இருக்கும்? அந்நேரங்களில் நமக்கு கிடைக்கும் ஆலோசனைகளையும், அனுதாபங்களையும் விட நாம் அடையும் கோபமும் வருத்தமும் மிக அதிகம்.

நமக்கு இறைவன் வழங்கிய மிகப்பெரும் அன்பளிப்பு நம் குழந்தைகள், அதற்காக நம் பிள்ளைகளுக்கு என்றும் நன்றி சொன்னது இல்லை, அதை நினைத்துக்கூட பார்த்ததும் கிடையாது,

ஆக அதற்கு கைமாறாக அவர்களை ஒழுக்கசீலர்களாக சமூக பயன்பாட்டிற்கு உகந்தவர்களாக, மனித நேயமிக்கவர்களாக, பொது நலம் பேணுபவர்களாக உருவாக்க வேண்டியது நமது கடமை. அதற்கு அவர்களின் கல்வியெனும் அறிவு மட்டும் போதுமானதல்ல பெற்றோர்களின் அன்பும் மிக முக்கியமானது.

குட்டிக் கதை

## பேராசையால் அழிவு

ஒருவன் காட்டுவழியே நடக்கும்போது ஒரு காட்சியைக் கண்டான். புலி ஒன்று கால் முறிந்து வேட்டையாட முடியாமல் கிடந்தது. ஆனால் ஆச்சரியப்படும்படி ஒரு நரி அந்தப் புலிக்கு உணவு கொண்டுவந்து தந்தது. ஆகா கடவுளின் செயல்கள் வியக்கத்தக்கவை என நினைத்தான் அந்த மனிதன். நானும் இந்தப் புலிபோல இங்கேயே படுத்திருந்தால் கடவுள் எனக்கும் இதுபோல உணவு தந்து காப்பாற்றுவார், எனச் சொல்லி அந்த இடத்திலேயே படுத்துவிட்டான். சில நாட்கள் ஆயின யாரும் வரவில்லை. பசியால் வாடினான். இன்னும் சில நாட்கள் பசி மயக்கத்தில் கழிந்தன. இறக்கும் நிலையில் இறைவனை வேண்டினான். ஏன் கடவுளே? அந்தப் புலிக்குக் காட்டும் இரக்கம் எனக்கு கிடையாதா?, என்றான். கடவுள் அவன் முன்னே தோன்றினார், மகனே அந்தக் காட்சி உனக்கு கிடைத்தது அந்தப் புலியைப் பின்பற்ற அல்ல அந்த நரியைப் பின்பற்ற என்றார். ஆத்திகன் கடவுள் இல்லையோ? என் சந்தேகப் படுவது போல நாத்திகனுக்கும் ஒருவேளை கடவுள் இருந்தால்? என்கிற சந்தேகம் எழும். சோதனை நேரத்தில் கடவுளை வேண்டாதவர் யார்? அப்படி வேண்டும்போது கடவுளே இந்தத் தொல்லையிலிருந்து யாராவது என்னை மீட்கமாட்டார்களா, யாரையாவது அனுப்ப மாட்டியா? எனக் குரலெழுப்புகிறோம். என்றாவது கடவுளே. இன்று நான் யாருக்காவது உதவ வேண்டுமா? அதற்கு எனக்கு வழிகாட்டு என வேண்டியிருக்கின்றோமா ?

## தெரிந்து கொள்வோமா ?


1496: லியார்னோடா டாவின்சி மேற்கொண்ட பறக்கும் இயந்திர சோதனை தோல்வியுற்றது.
1521: பாப்பரசர் 10 ஆம் லியோ, மார்டின் லூதரை சமூகப் பிரதிட்டை செய்தார்.
1815: பிரஷ்யா மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரியா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன ரகசிய பாதுகாப்புக் கூட்டணி அமைத்தன.
1925: இத்தாலியில் பெனிட்டோ முசோலினி அதிகாரத்திற்கு வந்தார்.
1947: அமெரிக்க நாடாளுமன்ற விவாதங்கள் முதல் தடவையாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.
1956: ஈபில் கோபுரத்தின் மேற்பகுதி தீயினால் சேதமடைந்தது.
1957: ஹமில்டன் கைக்கடிகார நிறுவனம் முதலாவது இலத்திரனியல் கைக் கடிகாரத்தை அறிமுகப்படுத்தியது.
1958: மேற்கிந்திய கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.
1959: அலாஸ்கா, அமெரிக்காவின் 49 ஆவது மாநிலமாக்கப்பட்டது.

## விடுகதைகள்

1. மண்டையில் போட்டால் மகிழ்ந்து சிரிப்பான். அவன் யார்?
2. நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?
3. கணுக்கால் நீரில் கரடி நீச்சல் போடுது. அது எது?
4. மரம் வாழ்பவனுக்கு முதுகிலே மூன்று சூடு. அது என்ன?
5. ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?

விடைகள்

1.தேங்காய் 2.தலைமுடி 3.தவளை
4.அணில் 5.மிளகாய்




## அழகிய கவர்ச்சியான கண்கள் !!!

கண்கள் பிரகாசமாக வேண்டுமா! கண்களில் கருவளையம் காணப்படுகிறதா? கருவளையத்தை அகற்ற ஆயிரக்கணக்கில் கொட்டத் தேவையில்லை. கீழ் உள்ள டிப்ஸில் உங்களுக்கு தேவையானதை தொடர்ந்து கடைப்பிடித்தால் அழகிய கண்களைப் பெறலாம்.

☐ கண்களை மூடிக்கொண்டு இரு கைகளையும் கண்களின் மீது குவித்து சிறிது கூட வெளிச்சம் தெரியாமல் இருட்டாக இருக்கும் படி செய்து, அந்த இருட்டிலேயே விழிகளை மட்டும் மேல், கீழ், பக்கவாட்டில் என்று அசைத்து பயிற்சியளிப்பதன் மூலம் கண்களின் சோர்வை அகற்றலாம்.

☐ கண் இமைகளின் மீது ஓர் ஈரத்துணியை வைத்துச் சிறிது நேரம் ஒத்தியெடுத்தால், கண்கள் குளிர்ச்சி பெறுவதுடன் கண்களுக்கு ஏற்பட்ட சோர்வும் நீங்கும்.

☐ இரவில் தினமும் கண் இமைகளில் விளக்கெண்ணெயை ஒன்று அல்லது இரண்டு சொட்டுக்கள் விட்டுவர கண்கள் பளபளப்பாகவும், பொலிவுடனும் இருக்கும்.


☐ பாதாம் பருப்புகளை பாலுடன் சேர்த்து நன்றாக அரைத்து கண்களைச் சுற்றி பேக் போடுவதால் கண்ணின் கருவளையம் மறையும்.

☐ சந்தனக் கல்லில் சாதிக்காயை அரைத்து இரவில் பூசி வந்தால் கருவளையம் விரைவில் மறையும்.


☐ மூடிய கண் இமைகளின் மீது பன்னீரை பஞ்சில் நனைத்து தேய்த்து விட, கண் இமைகளின் நிறம் கூடும்.

☐ நந்தியாவட்டை பூவை பறித்து நீரில் கழுவி வெள்ளைத் துணியில் சுற்றி கண்களின் மேல் வைத்து கட்டி வர கண்கள் பிரகாசமாகும்.


அவ்வாறில்லாவிடில் பறித்த பூவை தண்ணீரில் கழுவி கண்களின் மேல் ஒற்றியெடுக்க கண்கள் குளிர்ச்சியடைந்து பிரகாசமாகும்.



## பிட்ஸா



**தேவையான பொருட்கள் :** கோதுமை மா - 1 சுண்டு நிரப்பி, ஈஸ்ட் - 1 சிட்டிகை, முட்டை - 2, மாஜரீன் - 50 கிராம், சீஸ் - 250 கிராம், தக்காளி சோஸ் - 4 மே.கரண்டி, பம்பாய் வெங்காயம் - 1 பெரியது, கோவா - 50 கிராம், கரட் - 100 கிராம், லீக்ஸ் - 100 கிராம், உப்பு - அளவிற்கு,



மிளகுத்தூள் - அளவிற்கு, கோழி இறைச்சி அல்லது இறால் - 500 கிராம், மிளகாய் சோஸ் - 1 தே.கரண்டி, கோதுமைமா - 1 மே.கரண்டி.

**செய்முறை :** கோதுமை மாவை அரித்துப் பாத்திரத்திலிட்டு அளவிற்கு உப்புத்தூள், ஈஸ்ட், மாஜரீன் என்பவற்றையிட்டு நன்கு பிசிறிச் சேர்த்தபின் முட்டைகளை உடைத்து விட்டு நன்றாகப் பிசைந்து அளவிற்குத் தண்ணீர் விட்டுப் பற்றீஸ்மாப் பதத்திற்கு குழைத்து 8 மணி நேரத்திற்கு மூடிவைத்துக் கொள்ளவும்.

பின்னர் மரக்கறி வகைகள், வெங்காயம் என்பவற்றைத் துப்புரவு செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி நீர் ஒரு சிறுதுளி கூட இல்லாமல் நன்றாக வடியவிட்டெடுத்து உப்புத்தூள், மிளகுத்தூள் என்பவற்றை அளவிற்குச் சேர்த்துக் கலந்து வைக்கவும்.

இறைச்சியைத் துப்புரவு செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி உப்புத்தூள் இட்டு அவித்தெடுக்கவும். பின் அவித்த இறைச்சிக்கு மிளகாய்சோஸ் விட்டுக் கலந்து கொள்ளவும். சீசை ஸ்கிறேப்பரினால் துருவி அல்லது கத்தியால் சிறுசிறு துண்டாக வெட்டி எடுத்துக்கொள்க.

இவை அனைத்தையும் செய்தெடுத்த பின்னர் குழைத்து வைத்துள்ள மாக்கலவையை நான்கு சம பகுதியாகப் பிரித்து உருண்டைகளாக்கி ஒவ்வொரு உருண்டையையும் தனித்தனியாக எடுத்து மாப்பூசிய பலகையில் வைத்து 1/8 அங்குலத்தடிப்பான பெரிய தோசையளவு பருமனுள்ள வட்டமாக உருட்டியெடுத்து எண்ணெய் பூசிய கேக் தட்டில் வைத்து ஒவ்வொன்றிற்கும் 1 மேசைக்கரண்டி தக்காளி சோஸைப் பரவலாகப் பூசி, அதன் மேல் மரக்கறி வகைகளை ஒரு படை பரவி, அதன் மேல் இறால் அல்லது இறைச்சி என்பவற்றைப் பரவி, மேலே சீஸ் தூளை மரக்கறி வகைகள் மறையும்படி பரவி அவணில் வைத்து பேக் செய்து எடுக்கவும். அதிகமாக சீஸ் தூள் பாவித்தால் அதிக சுவையைப் பெறலாம்.

## சமையல் டிப்ஸ்

* வாழைப்பூவை நறுக்கும் போது கையில் படிந்துவிடும் கறையைப் போக்குவதற்கு சிறிதளவு வினாகிரி கலந்த நீரில் கையைக் கழுவிக்கொண்டால் கறை போய்விடும்.

* தேசிப்பழம் காய்ந்துவிட்டால், கொதிநீரில் போட்டெடுத்துப் பிழிந்தால் சாறு அதிகமாகவரும்.

* புரியாணி செய்யும்போது ஒரு தேசிப்பழத்தை பிழிந்துவிட்டால், சோற்றுப் பருக்கைகள் தனித் தனியாகவிருக்கும்.

* கோப்பி தயாரிக்கும் போது ஒரு சிட்டிகை மேசை உப்பைக் கோப்பியோடு கலந்து தயாரித்தால், கோப்பி வாசனையாகவும், சுவையாகவுமிருக்கும்.

* கோவா சமைக்கும் போது ஏற்படும் கோவா வாடையைத் தவிர்ப்பதற்காக, சமைக்கும் போது சிறு பாண்துண்டைச் சேர்த்துக்கொள்ளவும்.

* பாயாசம் விரைவில் இறுகிவிடுவதைத் தடுப்பதற்கு, சிறிதளவு தேசிப்பழச்சாறு சேர்த்துக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### வெளிநாட்டவர்கள் கண்காணிக்கப்படுவார்கள்.

இலங்கை குடிவரவு, குடியகழ்வு திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவு வெளிநாட்டவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அலகொன்றை புதிதாகத் திறக்கவுள்ளது. எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் நிஹால் ரணசிங்க கருத்து தெரிவிக்கும் பொழுது பணத்தைச் சுருட்டுதல், கணனிகளைச் சூறையாடுதல், விபச்சாரம் மற்றும் சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் ஆகியவற்றை இப்பிரிவு கண்காணிக்கும் என தெரிவித்துள்ளார். மேலும் நாட்டினது நலனையும் உல்லாசப்பயணத் துறையின் நலனையும் கருத்தில் கொண்டு புதிய சிந்தனைகள், நுட்பங்கள் ஊடாக வெளிநாட்டவர்களைக் கண்காணிக்கும் பணியை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் இக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு உல்லாசப் பயணத்தொழிற்துறை, உல்லாசப் பயணத்துடன் சம்பந்தப்பட்ட அரசதுறை மற்றும் காவல்துறை ஆகியவற்றிலிருந்து ஆலோசனைகளும் பெறப்படும் என்றும் தெரிவித்தார். அதேவேளை சிறந்த குணநலன் உடைய உல்லாசப்பயணிகளை பாதிக்காத வகையில் இத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பொறுப்புள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வெள்ள அனர்த்தம் — வடக்கையும் பாதித்தது.

இலங்கையின் 21 மாவட்டங்களை கடும் வெள்ள அனர்த்தம் பாதித்துள்ளது. கடந்த இரு வாரங்களாகப் பெய்த கடும்மழையால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை 400,000த்தை தாண்டியுள்ளது. சேதமாக்கப்பட்ட வீடுகள் 25,865 ஆக 29.12.2012 வரை பதிவாகியுள்ளது. அத்துடன் 40 பேரின் மரணம் இத்திகதி வரை பதிவுசெய்யப்பட்டுள்ளது. பிரதானமாக மாத்தளை, மட்டக்களப்பு, அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே மரணமாகியோரின் தொகை அதிகமாகக் காணப்பட்டது.

வடக்கில் 105,000 பேரைப் பாதித்துள்ள வெள்ளம் சுமார் 33,000 மக்களை தற்காலிக முகாம்களுக்குள் முடக்கியுள்ளது. வெள்ள நிவாரண நிதியாக அரசாங்கம் 142 மில்லியன் ரூபாய்களை வெள்ளத்தினால் சேதமுற்ற மாவட்ட செயலாளர்களுக்கு விடுவித்துள்ளது. வடக்கைப் பொறுத்தளவில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களே கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இம்மாவட்டங்களில் முல்லைத்தீவில் சேதமடைந்த வீடுகள் 12,600 ஆகவுள்ளது. 4,373 மக்கள் கிளிநொச்சியில் தற்காலிக முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். சமைத்த உணவு உடனடி நிவாரணமாக முகாம்களுக்கு வருகை தந்திருக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் உலர் உணவுப் பொதிகளும், தண்ணீர்ப் போத்தல்களும் அரசசார்பான நிறுவனங்களால் வழங்கப்படுவதாகவும் நிவாரண ஆணையாளர் தெரிவித்தார்.

### எதிர்க்கட்சியால் பெற்றுக்கொள்ளப்படாத நீதிமன்றக் கட்டளை

சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரித்த பாராளுமன்றதெரிவுக் குழுவினரை மீயுயர் நீதிமன்றத்தின் முன் வருமாறு விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணை தற்போது வரை அக்குழுவின் எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு கிடைக்கவில்லை என தெரியவருகின்றது. கண்டி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான லஷ்மன் கிரிபெல்ல இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் 30.12.2012 வரை தமக்கான அழைப்பாணை கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு கிடைக்குமானால் தாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம் என்றும் தெரிவித்தார். எனினும் இவ்வழைப்பாணை தொடர்பாக தாம் மேன்முறையீட்டு நீதிமன்றின் முன் வரப்போவதில்லை என்று ஆளுங்கட்சியினால் தேர்வு செய்யப்பட்ட பாரளுமன்ற தெரிவுக் குழு அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் இவ்விடயமானது இலங்கையின் பாராளுமன்ற இறையாண்மைக்குள் வரும் விடயமாதலால் இவ்விடய்ம் தொடர்பாக நீதிமன்றால் வழங்கப்பட்ட அழைப்பாணை வலிதற்றது என்றும் அதனால் சட்டவிளைவுகளை ஏற்படுத்தும் திறன் அவ்வழைப்பாணைக்கு இல்லை என்றும் அவர் மேலும்

## The Sunday Times: (தொடர்ச்சி)

தெரிவித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் இந்நீதிமன்ற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசரினால் தொடுக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டினை விசாரிப்பதற்காகவே இவ்வழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கண்டுபிடிப்புக்கள் வலிதற்றவை என தீர்க்குமாறு பிரதம நீதியரசரினால் இம்மேன்முறையீடு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கணனிக் குற்றம் — குற்றவாளி கைது

பல இளம் பெண்களின் நிர்வாண புகைப்படங்களை வலைப்பக்கத்தில் பதிவேற்றப்போவதாக அச்சுறுத்திய இளம் பொறியியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார். கிரிபத்கொடவில் தனியாக வசித்து வந்த 36 வயதுடைய சந்தேக நபரின் மனைவி சில காலங்களுக்கு முன் அவரை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். இவர் இவ்வாறு நிர்வாணப் படங்களை எடுப்பதற்காக தனது வீட்டில் 26 புகைப்படக் கருவிகளை மறைவாக பொறுத்தி தனது வீட்டிற்கு வரும் பெண்களையே படமாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களில் அவரது இக்குற்றத்தினால் சுமார் 100 பெண்களை நிர்வாணமாக அல்லது அரை நிர்வாணமாக படம் பிடிக்கக்கூடியதாக இருந்துள்ளதாக குற்றப்புலனாய்வினர் கண்டுபிடித்துள்ளனர். அவரது வீட்டிற்கு விருந்தினராக விழாக்களுக்கு வருபவர்கள் குளியலறையை பாவிக்கும் சந்தர்ப்பங்களில் இப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

அவரது வீட்டிற்கு அருகிலுள்ள அயலவர் ஒருவரால் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே இக்கைது நிகழ்ந்துள்ளது. இவ் அழகுக்கலை பெண் நிபுணர் சுமார் 3 நாட்களாக சூத்திரதாரி தனது தாயாரின் ஆண்டுத்திதியினை சிறப்பாக செய்வதற்கு வேலை செய்துகொண்டிருந்த வேளை தாமும் சென்று உதவி புரிந்துள்ளார். அச்சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு அவரை பயமுறுத்தியுள்ளதுடன் பெருமளவு பணத்தை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டதுடன் கடந்த பல மாதங்களாக பாலியல் தொடர்பையும் ஏற்படுத்தியுள்ளார். எனினும் பொறுத்தது போதும் என்று பொங்கி எழுந்த இப்பெண் காவல்துறையினரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## The Sunday observer:

### அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வடக்கிற்குப் பயணித்தன.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியவசிய பொருட்களை ஏற்றிய 10 பாரஊர்திகள் வந்தடைந்ததாக வட மாகாண ஆளுனர் தெரிவித்தார். அநுராதபுரத்திலிருந்தே இவ்வுணவு பாரஊர்திகள் வந்தடைந்துள்ளன. அத்துடன் பொறியியலாளர் குழுவொன்று நீர்த்தேக்கங்களின் நிலைமையினை கண்காணிக்க அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மன்னார் மாவட்டமே கடும் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் 17,339 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கில் அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர் நிரம்பி வழிகின்றது. இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன பணிமனை அறியத்தந்துள்ளது. முல்லைத்தீவு நகரத்திற்கு அருகிலுள்ள மூன்றாவது மைல் கல் பாலம் உடைந்துள்ளது. அப்பாலத்தினூடான போக்குவரத்து சேவைகளுக்கு படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. மன்னாரில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் திராக்டர்களே போக்குவரத்து பணிகளில் [illegible]

## The Observer : (தொடர்ச்சி)

### இலங்கையில் சிறுவர் போராளிகள் இல்லை — கோவையை மூடியது ஐ.நா

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் மற்றும் ஆயுத முரண்பாடுகள் சம்பந்தமாக தொழிற்படும் குழு தற்போது வரை திறந்துவைத்திருந்த இலங்கைச் சிறுவர் இராணுவம் என்ற கோவையை மூடியுள்ளது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்தபின் சிறுவர் ஆயுததாரிகள் எவரும் இல்லை என்பதால் இக்கோவை மூடப்பட்டுள்ளது.

### குறைவடையும் வடிதொழில்

இலங்கையில் பல பகுதிகளில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புகளினூடாக சட்ட விரோத வடி சாராய தொழில் சீரழிந்துள்ளது. இவ்வருடத்தில் இக்குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட உதவி தடுப்புப்பிரிவு 4,551 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளது. இச்சுற்றிவளைப்புக்களில் 4,332 சுற்றிவளைப்புக்கள் கள்ளச்சாராய கைப்பற்றல்களாகவும் 136 சுற்றிவளைப்புக்கள் ஆபத்தான மருந்து வகைக் கைப்பற்றல்களுக்காகவும், 83 சுற்றிவளைப்புக்கள் வெடிபொருள், வன, விபச்சார சுற்றிவளைப்புக்களாகவும் காணப்பட்டன. இச்சுற்றிவளைப்புக்களின் போது கைது செய்யப்பட்ட 4,515 பேரில் 3,220 பேர் குற்றம் காணப்பட்டு தண்டிக்கப்பட்டனர். இதனூடாக 36 மில்லியன் ரூபாய்களை வருமானமாக இவ்வுதவி தடுப்புப் பிரிவு வருமானமாக பெற்றுள்ளது. மொத்தமாக 1200 பரல் கள்ளச்சாராயத்தையும் 26,000 போத்தல்கள் கசிப்பையும் 325 கஞ்சாவையும் இப்பிரிவு கண்டுபிடித்துள்ளது.

### நீதியரசருக்கெதிரான குற்றச்சாட்டு — பெரும்பான்மையினரின் எண்ணமே கருத்தில் கொள்ளப்படும்.

பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தையே பிரதம நீதியரசருக்கெதிரான இக்குற்றச்சாட்டில் கவனத்தில் எடுக்கப்போவதாக அமைச்சர் நிமால் ஶ்ரீபாலடிசில்வா தெரிவித்துள்ளார். முரண்பாடுகள் காணப்பட்டாலும் கூட பிரதம நீதியரசருக்கெதிராக குற்றஞ்சுமத்தி அவரைப் பதவி நீங்க வேண்டும் என ஏலவே 117 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு மனுச்செய்திருந்தனர் என்பது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது என்று அவர் தெரிவித்தார். எனில் பிரதம நீதியரசருக்கெதிரான குற்றச்சாட்டுக்குப் பொறுப்பானவர்கள் ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களே என்ற குற்றச்சாட்டை இங்கு ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் கூறினார்.

### இலங்கை ஒரு சிறந்த உல்லாசபுரி — பிரித்தானிய விமான சேவை அறிவிப்பு

பிரித்தானிய விமான சேவையானது தனது முன்னுரிமைப் பயணப் பட்டியலில் இலங்கையை இணைத்துள்ளது. அது 2013ஆம் ஆண்டுக்கான சிறந்த பயண இடங்களாக 13 இடங்களைத் தேர்வு செய்தது. அவற்றுள் இலங்கையை முதலாவதாக பட்டியலிட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## ஒலிம்பிக்ஸ் - யங்ஒலிம்பிக்ஸின் வருடாந்த ஒன்றுகூடல்

ஒலிம்பிக் மற்றும் அதன் இணைக்கழகமான யங்ஒலிம்பிக் ஆகிய விளையாட்டுப் கழகங்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் விருந்துபசாரமும் கடந்த 29.12.2012 சனிக்கிழமை அன்று Trinco village Resturant ல் மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது.

காலை பத்து முப்பது மணியளவில் ஆரம்பித்த இவ்விழாவில் ஆட்டம், பாட்டம் கொண்டாட்டங்களோடு பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது மதிய போசனத்துடன் இனிதே நிறைவு பெற்றது. இதில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கழக உறுப்பனர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். பல ஆரம்ப கால உறுப்பினர்கள் தமது வயதையும், உடல் நலத்தையும் பொருட்படுத்தாது விழாவில் கலந்து கொண்டமை தமக்கு மனநிறைவைத் தருவதாக கழக உறுப்பினர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இவ்வருடம் இவ்விழாவின் சிறப்பம்சமாக "Awardin ceremony 2012" என்ற பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெற்றிருந்தது. ஒலிம்பிக் மற்றும் யங் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகங்களின் முன்னேற்றத்திற்காகவும;, அக்கழகங்கள் பெற்றுக் கொண்ட பல வெற்றிகளுக்க உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்து செயற் பட்டமைக்காகவும், பயிற்றுவிப பாளர்களுக்கும், எவ்வேளையும் கழகத்திற்காக தமது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கிய மூத்த உறுப்பினர்களுக்கும் "வாழ்நாள் சாதனையாளரகள்" விருது வழங்கப்பட்டிருந்தது.

ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் செயலாளர்களான திரு V.கிளனி ஜேன்பிள்ளை, திரு R.ஜோயல் ஜிப்சன், முன்னாள் தலைவர்களான திரு R.மகேந்திரன், திரு K.தெய்வேந்திரன், முன்னாள் உபதலைவர்களான திரு S.முத்துலிங்கம், ஆகியோரும், யங்ஒலிம்பிக் கழகத்தின் செயலாளர் திரு T.சிவராஜா, முன்னாள் தலைவர் திரு J.சுஜீவ் சேவியர், முன்னாள் பயிற்றுவிப்பாளர் திரு V.தங்கதுரை, மற்றும் முன்னாள் விளையாட்டு வீரர்களான திருS.சிவகுமார், திரு G.பீட் ஜோன்பிள்ளை ஆகியோரும் இவ்விருது வழங்கி கௌரவிக்கப் பட்டிருந்தார்கள். அதேபோல் கிரிக்கற் மற்றும் உதைபந்தாட்ட விளையாட்டுக்களுக்கான 2012ம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர்களும் வெவ்வேறு திறமைகளுக்காக தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி உற்சாகப்படுத்தப் பட்டிருந்தார்கள்.

மேலும் ஒரு குறிப்பிடக்கூடிய அம்சமாக புதிதாக கழக உறுப்பினர்களாக சேர்ந்த மற்றும், பதினாறு வயதிலும் குறைந்த இளம் வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தார்கள்.

மேற்படி பரிசில்கள் வழங்குவதற்கு கழக உறுப்பினர்களும், ஒருசில அனுசரணையாளர்களும், நலன் விரும்பிகளும் உதவி செய்திருந்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள்.

(அடிவாசன்)










மலைமுரசு பத்திரிகையின் அலுவலக வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

## திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கப் பொதுக்கூட்டம்

திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் 10வது வருடப் பொதுக்கூட்டம் திருமலை நகர மண்டபத்தில் 30.12.2012ல் நடந்தேறியது.

இரண்டு அமர்வுகளாக இக்கூட்டம் நடந்தேறியது. முதலாவது அமர்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அவர்களும் சிறப்பு அதிதியாக சி.தண்டாயுதபாணி - எதிர்க்கட்சித் தலைவர், கிழக்குமாகாண சபை அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

திருக்கோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் ஏ.எல். ரபாயிதீன் அவர்கள் தலைமையேற்ற இவ்விழாவில் வரவேற்பினை அச்சங்கத்தின் செயலாளர் திரு. கீத பொன்கலன் அவர்கள் வழங்கியிருந்தார்.

ஊடகப் பயிற்சியை நிறைசெய்தவர்களுக்குச் சான்றிதழ்களும் ஊடக சங்கத்தின் அங்கத்தினர்களுக்கான ஒலிப்பதிவுக் கருவிகளையும் இந்நிகழ்வில் வழங்கி வைத்தனர்.

இவ் ஒலிப்பதிவுக் கருவிகள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தன. இந்நிகழ்வில் 2013ம் வருடத்திற்கான நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்

## திறன் அபிவிருத்தி போட்டியில் வென்றவர்களுக்கு மாகாண முதலமைச்சரின் பரிசு

தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற மாகாண மட்ட திணைக்களங்களை கௌரவிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அரச திணைக்களங்களுக்கிடையிலேயே இப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன.

அப் போட்டிகளில் கிழக்கின் சில திணைக்களங்களும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### திருக்கோணமலை இ. கி. ச கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின்

## ஊவது அதிபராக திரு. செ. பத்மசீலன்

திருக்கோணமலை இ. கி. ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக இந்த ஆண்டிலிருந்து திரு. செல்வரத்னம் பத்மசீலன் அவர்கள் நியமனம் பெற்றுள்ளார்.

அதிபர் திரு.இரா. புவனேந்திரன் அவர்களின் சேவைக்கால முடிவில் திரு. பத்மசீலன் அவர்கள் நியமனம் பெற்றுள்ளமை முக்கியமான நிகழ்வாகும்.

திரு. பத்மசீலன் அவர்கள் பிரதி அதிபராக இப் பாடசாலையிற் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளதுடன் இந்துக்கல்லூரியில் பழைய மாணவரும் ஆவார்.

02.01.2013 அன்று காலை மணி 8.43ற்கு புதிய அதிபர் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார்.

(எஸ்எஸ் - எஸ்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 06. 01. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.